www.tamilarangam.net

# தூண்டில்



Tamilische Zeitschrift des Südasienbüros

47

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# ஆச்சி

எனக்குப் பசி.

நேற்றிரவு வேலை செய்யுமிடத்தில் சாப்பிட்ட பின்பு,இன்னுமில்லை.இப்போது மதியம் பன்னிரண்டு மணி.

இன்னும் சற்று நேரத்திற்குள் நான் பல் பிடித்தாகணும்.இல்லையேல் மூன்று மணிக்கு வேலைக்குப் போக முடியாது.

வேலை!

இலங்கையை விட்டு ஜேர்மனி வந்தபின்பு,என் வாழ்க்கை என்ன - எங்களின் வாழ்க்கை வேலைக்காகவேதான்.

இப்போது பசிக்குது.சமைச்சுச் சாப்பிடுவமென்றால் காலையிலை எழும்புவது கடினம்.பசியைப் பற்றி நினைக்கிறபோது ஆச்சியின்ரை ஞாபகம் வந்தது.

அம்மாட அம்மா;ஆச்சி.

மனுசி வயித்துக்கு வடிவாகப் படைக்கும்.ஊரிலை மனுசியைப் பற்றி அவ்வளவாக நல்ல அபிப்பிராயமில்லை.ஆனால் பசிக்குதெண்டு ஆரு வந்தாலும் மனுசி உப்பிட மறுப்பதில்லை.கேட்டுக் கொள்ளுங்கள் வடிவாக,மனுசி உப்பிட மறுப்பதில்லை!.

"அடியேய் கனகம்"

"அடியேய் கனகம்"

"என்னடி செய்யிறாய் வீட்டைப் பூட்டி வைச்சுக்கொண்டு...?"

"கந்தையற்றை மோள் பின்னை வேண்டின மாதிரி நீயும் ஆரிட்டையன் வேண்டுறியே?"

"என்ன கிழவி,ஆட்டைக் கடிச்சு,மாட்டைக் கடிச்சு... இப்ப என்னையே கடிக்கிறாயே!"

"அடி கூதி;வாய மூடடி.உனக்கு விஷயம் தெரியுமாடி?"

"என்னண்ணை நீ சொன்னாத் தானே தெரியும்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நான் சொல்லாட்டி இந்த துப் புக்கெட்ட ஊருக்கு ஒண்டுமே தெரி யாதே"

கிழவிக்கு இந்த இறுமாப்பு அதிகம்.ஆனால் மற்றவர்களின் வாழ்வெல்லே பாழாய்ப் போகுது. பலருடைய வாழ்க்கை இந்தக் கிழ வியின் கட்டுக்கதையால் அழிஞ்சு போயிருக்கு.

கிழவிக்கு தன்னைப் பற்றி ஊரிலை யாராவது கதைக்க வேணு மெண்டு சதா நப்பாசை.

ஒண்டை ரெண்டாக்கி,வாலுக் குத் தலைவைச்சு,தலைக்கு வால் வைச்சு கிழவி அவிட்டுவிடும்.இது ஒரு நோய் கிழவிக்கு.

பிறகு கேக்கவே வேணும்.ஊர் முழுக்க "முத்துப்பிள்ளைக் கிழவி சொன்னது" ," முத்துப்பிள்ளைக் கிழவி சொன்னது"எண்டு கிழவியி ன்ரை பெயர் காத்தோடு கலந்து விடும்.

மனுசி காதாறக் கேட்டு, மனமாற மகிழும்.

இதுக்கு எத்தனை பேற்றை வாழ்வு வேள்வியாக்கப்பட்டதென்று கிழவி கணக்கில் எடுப்பதில்லை . ஒருமுறை பேரன்ரை வாழ்க்கை யையே கிழவி தனக்கு அவலாக்கி மென்றது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆமாம்!என்ரை வாழ்க்கையைத் தான்.

இதிலை கிழவிக்குப் பாகுபாடில்லை.யாருடைய கதையும் கிழவிக்குப் பறவாயில்லை. தன்னுடைய பெயர் அடிபடவேணும்.இதில்தான் குறி.இப்போதைய அரசியல்வாதிகள்.இயக்கங்கள் போல!

இந்த முத்துப்பிள்ளைக் கிழவி இருக்கே அது ஒரு ஜென்மம்தாம்.

"கனகம்... கனகம்" கூப்பிட்டது கிழவி.அது வேறு யாரையுமல்ல. என்ரை மாமியைத்தான்.

மாமிக்கு கனகாம்பிகையெண்டு அவாவின்ரை தாய்மாமன் பெயர் வைச்சவராம்.

கனகாம்பரம் பூவைப்போல மாமி குழந்தையில அவ்வளவு வடிவாம்.இப்ப மட்டுமென்னவாம்?மாமி தனி அழகுதான்.

மாமி கல்லூரியில படிக்கேக்க தான் லவ் பண்ணிக் கல்யாணம் செய்தவா.மாமா அடிக்கடி "உன்ரை மாமி என்னை மயக்கிய மயக்கமிருக்கே அது இன்னும் தெளியவில்லை."என்று பகிடி விடுவார். அவர் இப்படிச் சொல்லுவது மாமியின்ரை வடிவை மறைமுகமாகப் பறைசாற்றத்தான் என்று எனக்குத் தெரியும்.

இந்த மாமியின் மகளைத்தான் நான் காதல் பண்ணுறன்.காதல் என்றால் எங்கடை காதல்தான் இந்த உலகுக்குப் புதுமையானது.இதுக்கு முதல் யாரும் காதலிச்சு இருந்தால்தாம் அது புரியும்!.

என்ரை மாமாவும்,மாமியும் காதலிச்சவர்கள்தாம்.ஆனா என்ரை காதலுக்கு மாமியும்,மாமாவும் சிவப்புக்கொடியோடை குறுக்க நிற்கினம். எனக்கு ஆச்சரியம்.பின்ன இருக்கதா?

நான் உழைச்சு தன்ரை மகளுக்கு ஐஞ்சு லெட்சம் பாங்கில போட்டுட்டுத்தான் கலியாணம் செய்ய வேணுமாம்.இது மாமி தரப்பு வாதம்.

பூநூல் கல்யாணம் செய்தபின்பு தாம் மகளை என்னோடு சந்திக்க விடுவாராம் மாமா.இதிலும் மாமி சேர்த்தி.

நான் பூநூல் போடுவதில் அவர்களுக்கு அதிக அக்கறை.மாமாவுக்கும்,மாமிக்கும் தங்கடை மகளை எனக்குக் கட்டிவைப்பதிலும் பார்க்க தங்கடை சுமைகளை எங்கடை வாழ்க்கைக்குள் சுமத்துவதுதாம் முக்கியம் போலக் கிடக்கு.

மாமா பூநூல்!

மாமி ஐஞ்சு லட்சம்!!

www.tamilarangam.net

அவர்களின் மகள்-என்னுடைய காதலியோ அவர்களுக்குள் தன்னைப் புதைத்துக்கொண்டு படி தாண்ட மாட்டேன் என்றுவிட்டாள். அவர்களுடன் ஒத்துப்போக கொஞ்சலுடன் என்னை வற்புறுத்தினாள்.

கிழவி கனகத்தைக் கூப்பிட, நானும்,மாமாவும் பிரதட்சயமானோம்.மாமாவோடு மல்லுக் கட்டின கிழவி என்னுடனும்...

"ஏன்ரா பொன்னன்ரை மகனிட்டை கள்ளை வேண்டிக் களவாய்க் குடிச்சிட்டு அங்கயே படுத்துக் கிடக்கிறனி இஞ்ச என்னடா செய்யிறாய்" கிழவி நாய்ப் பாய்ச்சல் பாய்ந்தது என்மீது.

"இவையளுக்கு உலகமே தெரியாது.இந்தக் குத்தியனுக்கு பெட்டையைக் கட்டி வைச்சா நாளைக்கு நாசமாய் போறது என்ரை சந்ததிதான்"

நான் ஒண்டும் பறையவில்லை. எல்லாம் கிழவிக்கே வெளிச்சம். மாமாவும்,மாமியும் என்மீது வைச்சிருந்த அபிப்பிராயம் மாறினது தாம் மிச்சம்.

கிழவியைத் திருத்த முடியாது. அது அறளை.கிழவியின் மிச்சக் கதைகளுக்கு எந்த மறுப்பும் சொல்லாமல் இந்தக் கதையை மட்டும் மறுத்தால் யார் நம்பப் போகிறார்கள்.

ஆனால் என்ரை காதல் மாமாவுக்கும்,மாமிக்கும் விருப்பமில்லாமலே இன்னும் நீண்டுகொண்டுதானிருக்கு.

அம்மா கடிதம் போட்டிருந்தாள். இப்பெல்லாம் ஊரிலை முத்துப்பிள்ளைக் கிழவியாலை தொல்லையில்லையாம்.

மௌனமாகிப்போன எங்கடை நாட்டிலை யாரும் பேசுவதில்லை. ஆனால் முத்துப்பிள்ளைக் கிழவி.... அதுதான் என்ரை ஆச்சியிருந்தால் மௌனிக்கப்பட்ட சூழலைக்கூட தகர்த்திருக்குமோ என்னவோ!

கிழவியின்ரை சாவு மனத்தை உறுத்துது.

எவ்வளவுதான் கிழவி என்னைப் பற்றித் தூற்றினாலும்,கிழவியின்ரை சாவு நெஞ்சை நெருடுது.

சோறு போட்ட கிழவி.

சிங்கப்பூர் பென்சரியின்ரை மனுசி.

கொழுவல்காறி.


இப்படியெல்லாம் கிழவியைப்

www.tamilarangam.net

பற்றி நிறையக் கதையுண்டு.உச்சி யிலை குண்டு துளைக்க ஊளையிட் டுக்கொண்டுதான் கிழவி போன தாம்.அம்மா எழுதியிருக்கிறாள்.

கிழவிக்கு நேர்ந்த சாவு கொடி யதுதான்.பசியில் கூட என்ரை ஆச்சி என்னைவிட்டுப் பிரியாமல் நிழலாடுறா.

* இனியன்




# இதோ சீதனம்!!

இளைஞனே,
நீ கேட்கும்
சீதனம்
அத்தனையும் தர
நான் தயார்,
அந்தச் சீதனத்தால்
உனக்கொரு
முதுகெலும்பை மட்டும்
நீ வாங்கத்
தயார் என்றால்!.

*

க.ரத்னம்




தொடர்புகளுக்கு
BCM Polaris
London WC1N 3XX
U.K



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நம்பிக்கை.

மீண்டும் விடியும்
இன்றைய காலைப்பொழுது!
ஜன்னல் திரை அகற்றி
எட்டிப் பார்க்கிறேன்.
பனிப் போர்வையுள் உறங்கும்
மரங்களும், கூரைகளும்
அசைவற்றுக் கிடந்தன.
வீதியில் பனிச்சேறு!
ஓய்வுநாள் தந்த நிம்மதியும்
நீண்ட உறக்கத்தின் சோர்வும்
உடலை இலேசாக்கியது.
விரல்களின் கோர்வையில்
நெட்டி முறித்து
'செற்றியில்' சாய்கிறேன்.
வெறுமை உணர்வுகளை
ஊதிய கொட்டாவியின்
ஒலி அடங்க...
அகதி வாழ்வைத் திரும்பிப் பார்க்கிறேன்.

ஆறு வருடங்கள் தொலைந்து போயின.
என் நண்பர்கள் பலரும்
தொலைந்து போயினர்.

உப்பு நீரில் பாதம் கழுவி
புனித வேள்வியின் தயாரிப்புக்காய்
அக்கரை சென்றதும்
சவுக்கம் தோப்பில்
விரக்தியை வாங்கி
தற்செயலாய்
இக்கரை சேர்ந்ததும்...

வரிக்குள் அடங்கா அனுபவங்கள்!

அவை
நான் உண்மையாக வாழ்ந்த நாட்கள்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்று முதல் இன்றுவரை
ஆண்டைக் கழித்து
கணக்குப் பார்ப்பதும்
வெறுமையோடு முடித்துக் கொள்வதுமாய்
என் நாட்கள் தொலைந்து போயின.
என் நண்பர்கள் பலரும்
தொலைந்து போயினர்.

அந்த நாட்கள் நேற்றுப் போல!
இன்று என்பது விரைவில் மறையும்.
நாளை நான்
மீண்டும் வாழ்வேன் என
நினைத்த நாட்களும்
தூரமாய்... தூரமாய்...

கட்டிய கைகளும்
திமிறித் திமிறி
புண்களாய்ப் போயின.
கட்டுக்கள் அறுபட
என் கைகள் உயரவும்
கால்கள் விரையவும் என
என்னுள் அடங்கிய வேகமும்
இப்போ
தூரமாய்... தூரமாய்...

என் பால்ய நண்பன்
யேர்மன் 'நிழலில்'
அகதி வாழ்வில்
தன்னைத் தொலைத்தான்.
அவனை நானும் தொலைத்தேன்.
இப்படி
என் நண்பர்கள் பலரும்
தொலைந்து போயினர்.

நேற்றைய வாழ்வின்
திருத்தப்பட்ட ஓர் பதிப்பிற்காய்
ஏங்கிய என் கனவுகள்
இன்னமும்
என்னிடம் எஞ்சியிருக்கிறது!

* ரகு *

www.tamilarangam.net

# எமது எதிர்காலம் ?

*தள்ளாடியபடியே நான் வீடு வருகையில்*
*யாரது வீட்டு வாசலில் நிற்பது?*
*வீடு தேடும் கள்ள அகதித் தமிழனொருவன்!*

- சென்ற வருடக் கடைசியில் "ஒரு ஜேர்மனியனின் அனுபவம்" எனும் தலைப்பில் புதிய நாஸிக ளின் ஒரு குழுவான Die Republikaner (குடியரசுக் கட்சி)வினால் வெளியிடப்பட்ட தேர்தல் பிரச் சாரக் கவிதையிலிருந்த சில வரி கள் இவை.

இலங்கையில் உயிர் வாழவும், வாய் திறக்கவும் முடியாத சூழ் நிலையில் பெருந் தொகைப் பணத் தைச் செலவழித்து பல கஷ்டங்கள் மத்தியில் பல நாடுகளினூடு - நம் பிக்கையோடு - ஐரோப்பாவை வந் தடைந்த தமிழர்களினதும், மற்றும் மூன்றாம் உலகநாடுகளைச் சேர்ந்த அகதிகளினதும் கதி மீண்டும் கேள் விக்குறியாகிறது. குறிப்பாக ஜேர் மனியில் இவ் வருட நடுப் பகுதி யில் பலர் திருப்பியனுப்பப்படப் போவதாகப் பயந்திருந்தனர். இது பின்னர் 31.12.1988க்குப் பின்னர் வந்து அரசியல் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்வர்கள் திருப்பி யனுப்பப்படுவர் என மாற்றப்பட்டுள் ளது. அதாவது அகதிகள் 1 நிமிடம் முந்தி வந்தவர்கள், 1 நிமிடம் பிந்தி வந்தவர்கள் எனப் பிரிக்கப் பட்டுள்ளனர்.

## ஜேர்மனியில் இன்று

"அகதிகள் வெள்ளம்" ( Asylanten flut)
"பொருளாதார அகதிகள்" (Wirtschaftsflüchtlinge)
"வள்ளம் நிறைந்துவிட்டது" (Das Boot ist Voll)

- போன்ற வார்த்தைகளை இப்போது சாதாரணமாகவே அரசி

www.tamilarangam.net

யல்வாதிகளிடமிருந்தும், தொலைக் காட்சி, பத்திரிகை, வானொலியிலும், சாதாரண ஜேர்மன் மக்களிடையேயும் கேட்கக் கூடியதாகவுள்ளது.

ஜேர்மன் மக்கள் வெளிநாட்டவராலும், அகதிகளாலும் தமது வேலை, வீடுகள் பறிபோவதாகவும், தமது நாட்டின் சுத்தமும், சட்டங்கள்-ஒழுங்குகளும், கலாச்சாரமும் அழிவதாகவும் கருதுகின்றனர்!. முக்கியமாகத் தமது வரிப் பணத்தில் வாழும் ஒட்டுண்ணிகளாகவே அகதிகளை இவர்கள் எண்ணுகின்றனர். குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளிலிருந்து வரும் குடியேற்ற வாசிகள் மீதும், அகதிகள் மீதும், நாடுகளற்ற ஐரோப்பிய நாடோடி வாழ்க்கை நடத்தும் சிந்தி, றோமா இன மக்கள் மீதும் அதிக எதிர்ப்புணர்வும், வெறுப்புணர்வும் வளர்ந்தும், வளர்க்கப்பட்டும் வருகிறது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷிலிருந்து வருபவர்கள் பயங்கரவாதிகள், தொற்று வியாதிக்காரர்கள், போதைப் பொருள் கடத்தல்காரர்கள், காட்டுமிராண்டிகள் என்ற அபிப்பிராயமும் வேரூன்றப்பட்டுள்ளது.

## குடியேற்றவாசிகளும், அகதிகளும்.

இரண்டாம் உலகப் போரின் பெரும் இழப்பினையடுத்து வெளிநாடுகளிலிருந்து பலர் வந்து மேற்கு ஜேர்மனியில் குடியேறத் தொடங்கினார்கள். முக்கியமாக கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து (கிழக்கு ஜேர்மனி உட்பட) 1945-1949 காலப்பகுதியில் மட்டும் 120 இலட்சம் ஜேர்மனியர் வந்து குடியேறினர். 1961இல் கிழக்கு-மேற்கு ஜேர்மனியைப் பிரித்து பேர்லின் மதில் கட்டப்பட்டவுடன் கிழக்கு ஜேர்மனியிலிருந்து வருபவர் தொகை வெகுவாகக் குறைந்தது. எனினும் தொடர்ந்து வந்து கொண்டிருந்தவர்களினால் மேற்கு ஜேர்மனிக்குத் தேவைப்பட்ட உழைப்புச் சக்திப் பிரச்சினை ஓரளவுக்குத் தீர்க்கப்பட்டதுடன், ஜேர்மனிய மக்கள் தொகையும் அதிகரித்தது.

தொழில் வளர்ச்சியினால் தொழிலாளர் பற்றாக்குறை பெருமளவு ஏற்படவே 1955-1973 வரையான காலப் பகுதியில் ஒப்பந்த அடிப்படையில் மத்திய தரைக் கடலையண்டிய நாடுகளான கிறீக், இத்தாலி, போர்த்துக்கல், யுகோஸ்லாவியா, ஸ்பெயின், துருக்கி, மொறாக்கோ, துனேசியஸ் நாடுகளிலிருந்து பல இலட்சக்கணக்கானோர் தொழிலாளிகளாக மேற்கு ஜேர்மனிக்குத் தருவிக்கப்பட்டனர். இரண்டாம் உலகப் போரில் அழிந்த மேற்கு ஜேர்மனியை மீண்டும் கட்டியெழுப்பிட - பொருளாதார அதிசயத்தை நிகழ்த்த - வெளி

www.tamilarangam.net

நாட்டுத் தொழிலாளரின் (Gast arbeiter) பங்கு முக்கியமானது. இவர்கள் இன்றும் கூட குடியேற்ற வாசிகள் (Immigranten) அல்லது வெளிநாட்டவர் ( Ausländer) என்றே அழைக்கப்படுகின்றனர்.

இன்று ஜேர்மனியில் அகதிகள் தவிர்ந்த வெளிநாட்டவரில் பெரும் பகுதியினர் சுமார் 20 வருடங் களுக்கு மேல் இங்கு வாழ்ந்து வரு பவர்கள். இவர்களின் குழந்தை களில் 100க்கு 80 பேர் இங்கேயே பிறந்து வளர்ந்து வருகிறார்கள். எனினும் இவர்கள் அனைவரும் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே நாடாத்தப்பட்டு வருகின்றனர்.

ஜேர்மனியில் சுமார் 50 இலட் சம் வெளிநாட்டவர்கள் இருப்பதாக மார்ச் 91இல் எடுக்கப்பட்ட கணக் கெடுப்பு தெரிவிக்கிறது. இது இணைந்த ஜேர்மனியின் மொத்த சனத் தொகையில் 6.5% ஆகும். அரசு தெரிவிக்கும் இத் தகவல் பிழையானதென்றும், வேண்டு மென்றே மிகைப்படுத்தப்பட்ட தொகையைக் கூறி ஜேர்மன் மக் களை அரசு பயப்படுத்துவதாகவும் அண்மையில் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் குற்றம் சாட் டியுள்ளார். அரசினால் தெரிவிக்கப் படும் தொகையைவிட மிகவும் குறை வாகவே வெளிநாட்டவர் இங்கிருப் பதாகவும், அரசு அடுத்தமுறை கண க்கெடுக்கும்போது பொது நிறுவன ங்களின் முன்னிலையில் நடாத்தி னால் இந்த உண்மை தெரியவரும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

பிரான்ஸில் 8%, பெல்ஜியத் தில் 9%, சுவிஸில் 16%, லக்ஸம் பேர்க்கில் 23% ஆக வெளிநாட்ட வர் தொகை இருக்கின்றதென அவ்வவ் நாட்டு அரசுகள் தெரிவிக் கின்றன. இவர்களில் அதிக மானோர் இந் நாடுகளின் பொரு ளாதாரத்தை வளப்படுத்த தொழி லாளிகளாகத் தருவிக்கப்பட்டவர் களே.

வேலைக்காக மேற்கு ஜேர்மனி க்கு வரவேற்கப்பட்டவர்கள் மேல் திட்டமிட்ட முறையில் பல கட்டுப் பாடுகள் விதிக்கப்பட்டன. தங்க ளின் உழைப்புச் சக்தியை இங்கு பறிகொடுத்த வெளிநாட்டுத் தொழி லாளர்கள் வெறும் சக்கையாக தமது நாட்டுக்குத் திரும்பிப் போக விரும்பவில்லை. எனினும் இரண் டாம் உலகப் போரின் பின்னர் ஜேர்மனியில் தோன்றிய முதலாவது பொருளாதார நெருக்கடியில் 1967-1968 காலப் பகுதியில் பல வெளி நாட்டவர்கள் தாமாகவே தமது சொந்த நாடுகளுக்குத் திரும்பிச் சென்றனர். ஆனால் எண்ணெய் விலையேற்றத்தின்போது ஏற்பட்ட இரண்டாவது நெருக்கடியின்போது 1972-1973 காலப் பகுதியில் சுய விருப்பினாலான வெளியேற்றம் பெருமளவில் நடக்கவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கால ஓட்டத்தில் வெளிநாட்டுத் தொழிலாளரின் பாத்திரம் ஜேர்மனியப் பொருளாதாரத்தில் இணைந்துவிட்டது. தொழிற்சாலைகளில் கனிசமானளவிலும், கட்டிட வேலை மற்றும் ஜேர்மனியர் அதிகம் விரும்பாத கடினமான, அழுக்கான வேலைகளிலும், ஆபத்தான வேலைகளிலும் வெளிநாட்டவரே அன்றிலிருந்து இன்றுவரை ஈடுபட்டு வருகின்றனர்.

தொழிலாளராக வந்த வெளிநாட்டவரைவிட அகதிகள் பலரும் ஹோட்டல்கள், விடுதிகள், தோட்டங்கள். பன்றி,மாட்டுத் தொழுவங்கள் மற்றும் ஆபத்தை உண்டுபண்ணும் இரசாயன கூடங்களிலும் எந்தவித பாதுகாப்புமின்றி வேலை செய்து வருகின்றனர். பலருக்கு வேலை அனுமதிப் பத்திரம் மறுக்கப்பட்டுள்ளதால் "களவாக" மிகவும் குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இவர்கள் தமது சம்பளத்தை தமது சொந்த நாட்டுச் செலாவணியில் கணக்குப் பார்த்து சந்தோசமும்(?) அடைந்துகொள்கின்றனர்.

இக் குறைந்த சம்பள விகிதத்தால் ஜேர்மனியின் செல்வம் மேலும் மேலும் செழிக்கிறது. வெளிநாட்டவர் உற்பத்திகளில் ஈடுபடும் அதே நேரம் நுகர் பொருட்களையும் வாங்குவதால் மூலதனத்தையும் அதிகரிக்கச் செய்கின்றனர்.

ஜேர்மனியில் ஓய்வூதியம் பெறுபவர் தொகை அதிகரிப்பதால் ஏற்படும் சமமின்மையை வெளிநாட்டவரே நிரப்புகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனியில் வாழும் வெளிநாட்டவரில் அகதிகள் சிறுதொகையினரே எனினும் அகதிகளில் பெருந்தொகையினர் "பொருளாதார அகதிகளே" என்றும், இவர்களை விரட்டும் வகையில் அகதிகள் சட்டம் மாற்றப்பட வேண்டும் எனவும் கோஷங்கள் தற்போது அதிகரித்து வருகின்றன.

ஐக்கியநாடுகள் சபையின் அகதிகள் ஆணையகம் (UNHCR) தெரிவிக்கும் கணக்கின்படி 150 இலட்சம் மக்கள் அகதிகளாக தம் சொந்த நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். இதில் பெரும் பகுதியினர் - 125 இலட்சம் பேருக்கு மேல் - ஆசிய, ஆபிரிக்க, தென்னமெரிக்க பகுதிகளில் தமது அண்டை நாடுகளான வறிய நாடுகளிலேயே தஞ்சமடைந்துள்ளனர். மிகுதி 25 இலட்சத்திற்கும் குறைவானவரே அகதிகளாக மேற்கு ஐரோப்பா, கனடா, வட அமெரிக்கா நாடுகளிற்கு வந்துள்ளனர்.

மேற்கு நாடுகளுக்கு அகதிகளாக வந்த இலங்கையைச் சேர்ந்த தமிழரின் தொகையைவிட, அயல் நாடான இந்தியாவுக்கு அகதிகளா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கச் சென்றவர்களின் தொகை அதிகமானதாகும். இந்தியாவுக்கு அகதிகளாகப் போனவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் எழுத்தில் வடிக்க முடியாதவை. இவர்களும் இன்று இலங்கைக்கு நாடுகடத்தப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இதைவிட தங்களின் சொந்த நாடுகளிலேயே பெருந்தொகையான மக்கள் அகதிகளாக முகாம்களிலும், காடுகளிலும், பதுங்குகுழிகளிலும் வாழ்கின்றனர். இலங்கையில் 1 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

## அகதிச் சட்டங்கள்

" எந்தவகையான அரசியற் துன்புறுத்தல்களிற்கு உள்ளானவரும் இங்கு அகதி உரிமை பெறத் தகுதியுடையவர் " என்கிறது ஜேர்மனிய அகதிகள் அடிப்படைச் சட்டம். 1949இல் இயற்றப்பட்ட இச் சட்டத்திற்கு கடந்தகால ஜேர்மனிய நாஸி-பாஸிஸ ஆட்சி ஏற்படுத்திய அழிவையும், இழிபெயரையும் சரிக்கட்ட வேண்டியிருந்ததாலும் இரண்டாம் உலகப் போரில் தாம் அகதிகளாக வெளிநாடுகளில் பட்ட அனுபவங்களினாலும் ஆதரவு கிடைத்தது. அத்துடன் ஐ.நா. அகதிகள் சபையின் "ஜெனிவா உடன்படிக்கை" 1951இல் முக்கியமாக கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து வரும் அகதிகளைக் கருத்திலெடுத்தே செய்யப்பட்டது. மற்றும் இரண்டாம் உலகப் போரின் படிப்பினை இவ்வாறான ஒரு உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளும் தேவையை மேற்கு நாடுகளுக்கு ஏற்படுத்தியது.

கிழக்கு ஐரோப்பாவிலிருந்து வந்த அகதிகளை மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்திரேலியாவில் குடியமர்த்துவது பெரும் பிரச்சினையாக இருக்கவில்லை. அதில் அந்தந்த நாடுகளின் அரசியல், பொருளாதார நலனும், மக்



www.tamilarangam.net

களிடையே நிற, மத, கலாச்சார வேறுபாடுகள் குறிப்பிடத்தக்களவு இன்மையும் இதற்குக் காரணமாயிருந்தன. ஆனால் 60களின் கடைசியில் ஆசியா, ஆபிரிக்கா, தென் அமெரிக்காவிலிருந்து (அதாவது மூன்றாம் உலகநாடுகளிலிருந்து!) அகதிகள் வரத் தொடங்கினர். இதனால் ஜெனிவா உடன்படிக்கையானது இவர்களைக் கவனத்திலெடுக்கவேண்டியதாயிருந்தது. இவ்வுடன்படிக்கை இதற்கேற்ப 1967 இல் மீண்டும் விரிவுபடுத்தி எழுதப்பட்டது.

இங்கு வந்து தஞ்சம் கேட்கும் அகதிகளில் 90%ஆனோரின் விண்ணப்பங்கள் "ஜேர்மனிய அகதிகள் சட்டத்தின்படி" நிராகரிக்கப்படுகின்றன!. போதிய காரணங்கள் இருப்பின் நிராகரிக்கப்பட்டவர் மீண்டும் விண்ணப்பிக்கலாம்!. திரும்பவும் அதே சட்டப் பிரகாரம் அவர் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்!!. விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டோர் நாடு திருப்பியனுப்பப்பட்டால் உயிர், உடல் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுவார்களாயின்(?) ஜெனிவா உடன்படிக்கையின்படி "மனிதாபிமான" காரணங்களால் தற்காலிகமாக இங்கு தங்க சில அகதிக் குழுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும் துருக்கியிலும், ஈராக்கிலும் குர்திஷ் மக்கள் பெருமளவில் கொல்லப்பட்டுக்கொண்டிருந்தபோதுதான் இங்கிருந்து தஞ்சம் நிராகரிக்கப்பட்ட குர்திஷ் அகதிகள் தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த பகுதிகளுக்கு பலவந்தமாக நாடுகடத்தப்பட்டார்கள். இதேபோல் யூகோஸ்லாவியால் இனங்களுக்கிடையிலான மோதல்கள் உக்கிரமடைந்திருக்கும்போது யூகோஸ்லாவிய அகதிகள் அப் பகுதிகளுக்கு பலாத்காரமாக நாடு கடத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

## அகதிகள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள்

1). பெரும்பாலானோர் தனியான முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். இவை நகரை விட்டு ஒதுக்குப்புறமாகவே அமைக்கப்பட்டுள்ளன. இந்த முகாம்களில் பெரும்பாலானவை பலகைகளால் அடைக்கப்பட்ட அறைகளாகும்!. இன்று வளர்ந்துவரும் வெளிநாட்டவர் விரோதத்தால் இப்படியான முகாம்கள் நாஸிகளால் தாக்கப்படும்போது உடனடி உதவிகள் இம் முகாம்களுக்குக் கிடைக்காமல் போவதுடன், பாதிப்புகள் பற்றிய செய்திகளும் வெளியில் வரும் சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவாகும்.

2). அகதிகள் தாங்கள் வாழும் இடங்களைவிட்டு வேறு இடங்களுக்குச் செல்லமுடியாது.

3). இன, நிற வாத பாகுபாட்டிற்கு

www.tamilarangam.net

உள்ளாவதால் அகதிகள் பலரின் மன நிலை பாதிக்கப்பட்டு வருகிறது. சிலர் மனநோய் வைத்தியசாலைக ளில் அனுமதிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

4). பொலிஸாரின் மறைமுக ஒத்துழைப்புடன் அகதிகளுக்கு எதி ரான வன்முறைகள் அதிகரித்து வரு கின்றன.

5). ஏராளமான அகதிகள் இன்னமும் நாடுகடத்தப்படும் அபாயத்திலேயே உள்ளனர்.

## ஜேர்மனிய அரசியலும் வெளி-நாட்டவரும்

வெளிநாட்டவர் பிரச்சினை இரண்டாம் உலகப் போரினைய டுத்து ஜேர்மனிய அரசியல் வரலா ற்றில் முக்கிய இடம் பிடித்தே வந் துள்ளது. 1973இல் CDU ஆட்சி செய்த மாநிலங்களில் ஒப்பந்தம் முடிந்த வெளிநாட்டுத் தொழிலா ளரை வெளியேற்ற முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. ஆனால் அது அவ் வளவாகக் கைகூடவில்லை. பின் 80களில் தேர்தல் காலத்தில் அப் போது எதிர்க்கட்சியாக இருந்த CDU/CSU கூட்டணி அகதிகள் பிர ச்சினையையே பிரச்சாரம் செய்தன. இக் காலப் பகுதியில் 2 வியட்நாமி யர்கள் கொல்லப்பட்டனர். 1986 களில் நடந்த பல்வேறு தேர்தல்க ளில் SPDயின் பிரச்சாரத்திலும் அகதிகளின் பிரச்சினையே முக்கிய இடம் பிடித்தது. தற்போது பெரும் பாலும் எல்லாக் கட்சிகளும் அகதி களின் பிரச்சினையைத்தான் தூக் கிப்பிடித்துள்ளன.

1989 யூனில் நடந்த ஐரோப் பிய பாராளுமன்றத் தேர்தலில் வெளிநாட்டவர் மற்றும் அகதிகள் பிரச்சினையை முக்கியமாக வைத்து வெளிநாட்டவரே வெளியேறு என்ற கோஷத்துடன் போட்டியிட்ட நாஸிக் கட்சியான Repblikaner 20 இலட் சத்திற்கு மேற்பட்ட வாக்குகளை ஜேர்மனியில் பெற்றது. இது ஆளும் வலதுசாரிக் கூட்டணிகளுக்கு (CDU/CSU) பெரும் தலையிடி யைக் கொடுத்தது!. ஆனால் 1990 டிசம்பரில் நடைபெற்ற இணைந்த ஜேர்மனிக்கான முதலாவது பாரா ளுமன்றத் தேர்தலில் ஜேர்மன் தேசியவாதமும், பொருளாதாரக் கற்பனையும், மிகை எதிர்பார்ப்புக ளும் வலதுசாரிக் கூட்டணியை மீண் டும் பெரு வெற்றியீட்டச் செய்தது.

இணைந்த ஜேர்மனியின் செலவு, வளைகுடா யுத்தத்திற்கான கூலி, ரஷ்யாவுக்கான பொருளா தார உதவிகள், தலைநகரை Bonn லிருந்து Berlinக்கு மாற்றியதால் ஏற்பட்ட செலவு... போன்ற பல காரணங்களினால் வரிச்சுமை சாதா ரண மக்கள் மேல்தான் சுமத்தப்பட் டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முக்கியமாக முன்னாள் கிழக்கு ஜேர்மனியில் வாழும் ஜேர்மனியரு க்கு மேற்கு ஜேர்மனி ஆளும் கூட் டணிக் கட்சியினால் தேர்தலுக்கு முன் கொடுக்கப்பட்ட ஆசை வாக் குறுதிகளுக்கு எதிரான முறையில் வேலையில்லாத் திண்டாட்டம், வீட்டு வாடகை உயர்ச்சி, பொருட் கள் விலையேற்றம், வீடில்லா திண் டாட்டம்... என்பனவே திணிக்கப் பட்டன்னன. இந்நிலையில் அம் மக் களின் கோபத்தை முதலாளித்துவத் தின் மீதும், அரசாங்கத்தின் மீதும் திருப்புவதற்குப் பதிலாக அங்கு வாழ்ந்திடும் மூன்றாந்தரப் பிரஜை களான அகதிகளுக்கும், வெளிநாட் டுத் தொழிலாளருக்கும் எதிராகத் திருப்புவது இலகுவாகவேயுள்ளது. இவ் வெறுப்புணர்வு அகதிகளைப் பாதையில் வைத்துக் கொல்லுமள விற்கு வெறியூட்டப்பட்டுள்ளது. இந்த கொலை வெறியினால் கிழ க்கு ஜேர்மன் பகுதிகளுக்குப் பல வந்தமாக அனுப்பப்பட்ட அகதிகள் மேற்கு ஜேர்மனிக்குத் தப்பியோடி வருகிறார்கள்.

இந் நிலையில் "அகதிகள்-வெளிநாட்டவர் பிரச்சினை" ஒன்றே ஆளும் கூட்டணிக்கு தன்னை மக்களின் வெறுப்பிலிருந்து காப் பாற்றிக் கொள்ள கைகொடுத்துவரு கிறது. எதிர்க்கட்சிகளும் சமரசங் களுடன் இதற்கு ஒத்துப் போகின் றன.

அகதிகள் அடிப்படைச் சட்டம் மாற்றப்பட வேண்டும் என்றும், புதிய வெளிநாட்டவர் சட்டம் கொண்டுவரப்படவேண்டும் என்பது பற்றியும் பாராளுமன்றத்தில் தொட ர்ந்து விவாதங்களும், சர்வகட்சி மாகாநாடுகளும் நடைபெற்று வரு கின்றன. ஏற்கெனவே அகதிகள் மீது மக்கள் கொண்டிருக்கும் நிற, இன வெறியிலான வெறுப்புக்கு இவ் விவாதங்கள் மேலும் எண் ணெய் ஊற்றுகின்றன.

இவற்றின் ஒரு பகுதியாக ருமேனியா, யூகோஸ்லாவியாவி லிருந்து வரும் அகதிகளை இனி மேல் ஏற்றுக்கொள்வதில்லை என் றும், மாதாந்தம் ஆகக் கூடியது 300 அகதிகளுக்கு மேல் ஏற்றுக் கொள்வதில்லை என்றும், அகதிக ளுக்கான உதவிப் பணத்திற்குப் பதி லாக குறிப்பிட்ட பொருட்களை வாங்கக்கூடிய வவுச்சர்களை கொடு ப்பதென்றும் வெவ்வேறு மாநிலங் களில் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

## ஐரோப்பாவும், அகதிகளும்.

மேற்கைரோப்பிய நாடுகளில் அகதிகள், வெளிநாட்டவர் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பிரான்ஸில் "உத்தி யோகபூர்வமில்லாமல்" குடியேறி யுள்ளவர்களென கருதப்படும் சுமார் 1 இலட்சம் அகதிகளை நாடுகடத்த முயற்சி நடக்கிறது. சுவிஸில் குற்

www.tamilarangam.net




றங்களை இழைத்ததாகக் கருதப் படும் அகதிகள் தொடர்ந்து நாடு கடத்தப்பட்டு வருகின்றனர்.

"மூன்றாம் உலக" மக்கள் பெரு மளவில் வருவது தமது நாட்டின் எதிர்கால நலன்களுக்கு அச்சுறுத் தலாக இருக்கும் என மேற்கை ரோப்பிய அரசியல்வாதிகள் கருது வதால் இம் மக்களின் வருகையைக் கட்டுப்படுத்தக் கூடிய பல்வேறு தடைகளைக் கொண்டுவருகின்றனர். குறிப்பாக மேற்கைரோப்பிய நாடு களிடையே கூட்டாகச் செய்யப்பட் டுள்ள Trevl Group, Schengen உடன்படிக்கை களின் முக்கிய நோக்கம் "மூன்றாம் உலகினின் றும்" வருபவர்களை எல்லையில் வைத்தே திருப்பியனுப்புதல். விசா இல்லாமல் உள்ளே வரத் தடை விதித்தல். தங்கள் நாடுகளில் வாழும் வெளிநாட்டவர் பற்றிய அனைத்து விபரங்களையும் தமது நேச நாடுகளுக்கும் பகிரங்கப்படுத் துவது. கொம்பியூட்டர் வலைப்பின் னல் தொடர்புப் பரிவர்த்தனை. "பயங்கரவாதத்திற்கு" எதிரான கூட்டு நடவடிக்கை .. என்பவற்றை அடிப்படையாகக் கொண்டவையா கும். மூன்றாம் உலகநாட்டினருக் கும், முதலாளித்துவ எதிர்ப்பாள ருக்கும். புரட்சியாளருக்கும் எதி ராக கூட்டாக அடக்குமுறையைப் பிரயோகிப்பதும் ஐரோப்பியக் கூட் டின் நோக்கமாகும். அத்துடன் அமெரிக்கா, ஜப்பான் ஏகாதிபத்தி யங்களிற்கு தாக்குப்பிடிக்கும் முக மாகவும். அவற்றை பொருளாதார ரீதியில் வெற்றி கொள்வதற்காக வும் மேற்கு ஐரோப்பியக் கூட்டு மேலும் விரிவடைகிறது.

தமக்கிடையே எல்லைகளை நீக்குவதும், இதன் மூலம் பொருட் கள், மூலதனம், மனிதவளம் என் பவற்றை சுலபமாகப் பரிமாறிக் கொள்வதும் நடைபெறவுள்ளது. இணையும் மேற்கைரோப்பாவிற்கு புதிய சந்தையாகவும், மலிவான உழைப்புச் சக்தி வாங்கியாகவும்

www.tamilarangam.net

கிழக்கு ஐரோப்பிய நாடுகள் விளங்கும். சோவியத் ரஷ்யா, கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் வீழ்ச்சியையடுத்து மூன்றாம் உலகானது இந் நாடுகளுடன் சேர்ந்துவிடும் அரசியல் அபாயமும் தற்போது இல்லை!. அத்துடன் மூன்றாம் உலகநாடுகளிலிருந்து சுரண்டலும் இதனால் ஏற்படும் பொருளாதார, அரசியல் நெருக்கடியும் உருவாக்கும் அகதிகள் மேற்கு நாடுகளுக்கு வருவதைத் தடுக்க கடும் சட்டவிதிகளைக்கொண்ட "புதிய மதிற்சுவர்" எழுப்பப்பட்டு வருகிறது.

எனவே இந்நிலையில் அகதிகள், குடியேற்றவாசிகள் உருவாவதற்கான அடிப்படைக் காரணத்தை அறிய முயல்கையில் தவிர்க்கவியலாதபடி காலனித்துவ-நவ காலனித்துவ வரலாற்றைப் பார்க்க வேண்டியுள்ளது.

## காலனித்துவ-நவ காலனித்துவ வரலாறு

இந்தியாவின் வளம் பற்றி அறிந்த ஐரோப்பியர்கள் 15ஆம் நூற்றாண்டுக் கடைசியில் கடற் பயணங்களை மேற்கொண்டனர். ஸ்பானியனான கொலம்பஸ் தலைமையில் புறப்பட்ட குழுவொன்று 1492இல் அமெரிக்கக் கண்டத்தை வந்தடைந்தது. இதையே அவன் இந்தியாவென்று நம்பி அங்கு வாழ்ந்த பூர்வீக மக்கள் எதிர்பார்த்தவாறு கறுப்பு நிறமாக இல்லாமல் சிறிது சிவப்பாக இருந்தமையினால் "சிவப்பு இந்தியர்" எனக் குறிப்பிட்டான். இதே காலப் பகுதியில் போர்த்துக்கீசர் இந்தியாவின் கோவா பகுதியை வந்தடைந்தனர்.

இவ்வாறு ஐரோப்பியர்கள் ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா கண்டங்களை வந்தடைந்தனர். வியாபாரம் செய்ய வென்று வந்தவர்கள் அந் நாடுகளையே தமதாக்கினால் இன்னும் எவ்வளவோ இலாபமென படிப்படியாக தமது அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்தனர். முக்கியமாக வட அமெரிக்கா, அவுஸ்திரேலியாக் கண்டங்களின் சொந்த மக்களை, அவர்களின் கலாச்சாரங்களை, வாழ்வை அழித்தனர். இவ்வாறு அந்நாட்டு பூர்வீக மக்களின் கொடூரமான அழிப்புடன் தமது அதிகாரத்தை நிலைநிறுத்தினர்.

தென்னமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா கண்டங்களிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அங்கிருந்த கிராமிய தன்னிறைவுப் பொருளாதார அமைப்புமுறை குலைக்கப்பட்டது. நகரங்களில் தொழிற்சாலைகள் தோன்றின. முக்கிய விளைவாக அங்கிருந்த பொருளாதார அமைப்புமுறை முதலீட்டு வர்க்கம், மேல்தட்டு வர்க்கம், மத்தியதர வர்க்கம் என்ற சுரண்டல் அமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ப்புமுறையாக மாற்றமடைந்து பெருந்தொகையில் பட்டினிச் சாவுகளையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஏற்படுத்தியது.

காலம் செல்கையில் உள்நாடுகளில் காலனித்துவ எதிர்ப்பும், இரண்டாம் உலகயுத்த முடிவில் ரஷியாவின் வெற்றியும், ஆசிய, ஆபிரிக்க, தென்னமெரிக்க நாடுகளில் காலனித்துவத்தைத் தொடர முடியாமற் பண்ணின. ஆனால் அது அவ்வவ் நாடுகளில் உருவாக்கியிருந்த பொருளாதார அமைப்புமுறையும், அதிகார வர்க்கமும், படித்த புதிய மத்தியதர வர்க்கமும் மீண்டும் நவ காலனித்துவமாக காலனித்துவ நாடுகளை ஐரோப்பிய, அமெரிக்க ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருக்கச் செய்தன.

காலனித்துவத்திலிருந்து நவ காலனித்துவமாகச் "சுதந்திரமடைந்த நாடுகளின்" அதிகார வர்க்கமும், முதலாளிகளும், பண்ணையார்களும் இன்னும் முர்க்கமாக தமது பங்கிற்கு மக்களைச் சுரண்டினர். இன்றும் இன்னும் புதிய மேற்குநாட்டுத் தொழிற்சாலைகளை கொடூரச் சுரண்டலுக்குத் திறந்து விட்டனர். இவர்கள் எமது நாடுகளிலும் தொழிலாளருக்கு கிடைத்த அற்ப சொற்ப சலுகைகளையும் தடைசெய்தனர். உதாரணமாக, கொழும்பு வர்த்தக வலயத்தில் வேலை செய்யும் தொழிலாளருக்கு தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை மறுக்கப்பட்டதைக் குறிப்பிடலாம்.

எமது நாடுகளில் அதிகரிக்கும் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் என்பவற்றிற்கு எதிராக மக்கள் திரளும்போது அவை அதிகார வர்க்கத்தினால் கொடூரமாக அடக்கப்படுகின்றன. இதற்காக பொலிஸ், இராணுவத்தின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு ஆயுதங்கள், இராணுவத் தளபாடங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனால் குறையும் அந்நியச் செலாவணிக்காக அரசு மீண்டும் தேயிலை, கோப்பி, சணல்... என்று வர்த்தகப் பயிர்ச்செய்கையில் முலதனமிடுவதும், மூலவளங்களை இன்னும் இன்னும் மலிவாக ஏற்றுமதி செய்வதும் நடைபெறுகிறது. இதனால் உள்நாட்டு உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டு மீண்டும் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் என்பன அதிகரித்து அதிகாரவர்க்கத்திற்கு எதிராக மக்கள் திரளுவதும், அரசு அடக்குவதும்... என ஒரு சங்கிலித் தொடராக நடைபெற்றுவருகிறது.

மேற்கைரோப்பிய-அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் தமது நலன்களைப் பாதுகாக்க உள்நாட்டில் தமது மூலதனங்களைக் காப்பாற்ற மூன்றாம் உலகநாடுகளில் தாங்கள் தரகர்களான தலைமைகளைக் காக்க நிதி, ஆயுத, இராணுவமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்லா வகையிலும் உதவும்.

எனவே பொதுவாக எமது பொருளாதார அரசியல் அமைப்பு முறை தொடர்ந்து கீழே சென்று கொண்டிருப்பதே யதார்த்தத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

தென்னமெரிக்காவின் தங்கமும், பொதுவாக மூன்றாம் உலகநாடுகளிலிருந்து சுரண்டப்பட்டுக் கொண்டு செல்லப்படும் மூலதனம், மூலவளாங்களும், கூலியுழைப்பும் ஐரோப்பிய, அமெரிக்க கைத்தொழில் வளர்ச்சிக்கு அடித்தளம் போட்டுக் கொடுக்கின்றன. இன்னும் இது தொடருகின்றது.

எனவே மூன்றாம் உலகநாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடி கூடுகையில் பொருளாதார அகதி-களாக்கப்படுவர். இந் நெருக்கடி உச்சக்கட்டமடைகையில் அரசியல் அகதிகளாக்கப்படுவர். அதனால் இரு பிரிவினரையுமே அரசியல் அகதிகளாகவே காணலாம்.

எனவே இன்றும் நீடித்துக் கொண்டிருக்கும் காலனித்துவ, நவ காலனித்துவ சுரண்டல் வடிவத்தின் விளைவுகளில் ஒன்றே ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளை நோக்கிய மூன்றாம் உலகநாட்டு அகதிகளின் வருகையாகும்.

## நாம் செய்யவேண்டியவை

1992உடன் காலனித்துவம் 500 ஆண்டை நிறைவுசெய்கிறது. இந் நிறைவுடன் இன்னும் இறுக்க மாகும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் கூட்டானது இன்னும் மூர்க்கமாக மூன்றாம் உலகநாட்டு மக்களைச் சுரண்டும். இந் நாடுகளிலிருந்து தப்பியோடி வருபவர்களை எல்லைகளிலேயே நிறுத்தும். உள் நுழைந்தவர்களின் உரிமைகளைப் பறித்து அடக்கும்.

இந்நிலையில் இங்கிருக்கும் நாம் என்ன செய்யலாம்?

1). எமது இங்கு வாழும் உரிமையை வலியுறுத்துதல்.

2) எமது நாடுகளில் வாழ்கின்ற மக்களின் குரலை இங்கு ஒலித்தல்.

3). எம்நாட்டின் அதிகார வர்க்கத்தினரின் அடக்குமுறைகளையும், அதற்கு இம் மேற்குலக முதலாளித்துவம் எவ்வாறு உதவுகின்றது என்பதையும்-

தொடரும் மேற்குலகநாடுகளின் கொடூரச் சுரண்டலையும்-

மேற்குலக நாடுகளின் ஆயுத, இராணுவ உதவிகளையும்-

தொடர்ந்து அம்பலப்படுத்துதல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

4). நாட்டைவிட்டு வெளியேறி வெவ்வேறிடங்களில் சிதறியிருந்தாலும் எமது நாடுகளின் சமூக மாற்றத்திற்காக எமது சக்திகளை ஒருங்கிணைத்து முடியுமானளவுக்கு உழைத்தல்.

5). தமது நாடுகளிற்கு வரும் மூன்றாம் உலகநாட்டவர் மேல் வெறுப்பை உமிழும் இம் மேற்கத்தையர் தமது விடுமுறையை உல்லாசமாகக் கழிக்க இதே மூன்றாம் உலகநாடுகளைத் தேடிப்போய் தமது அந்நியச் செலாவணி மூலம் அந்நாட்டு அதிகார வர்க்கங்களுக்கு முண்டு கொடுப்பதும், தமது பாலியல் இச்சைகளுக்கு அங்குள்ளவர்களைப் பயன்படுத்துவதும், தமது நாடுகளுக்குத் திரும்பியதும் தாம் போய்வந்த நாட்டின் மக்கள் பற்றி பொய்ப்பிரச்சாரம் செய்வதும்... போன்ற இழிசெயல்களை எதிர்க்க வேண்டும்.

6). இங்கு இன, மத, நிற, கலாச்சார அடக்குமுறைகளுக்கு ஆளாபவர்கள் என்ற ரீதியிலும், மூன்றாம் உலகநாட்டு மக்கள் என்ற ரீதியிலும் மூன்றாம் உலக நாட்டு அகதிகள் ஒன்றுபட்டு போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

* ராகவன் *

# மனித அழிப்புக்கு இலஞ்சம் !!!

இலங்கையில் இனவாத அரசினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் பற்றி சர்வதேசமும் அறியும். சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச மனித உரிமைச் சங்கங்களின் அறிக்கைகள் ஒருபுறமிருக்க, இலங்கையிலிருக்கும் மேற்கு நாடுகளின் தூதுவராலயங்கள் என்னவெல்லாமோ அனுப்பிக் கொண்டிருக்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றித் தங்கள் நாடுகளுக்கு அறிவிக்காமலா விடும்?!

இப்படியிருக்க, இம் மாதம் ஜேர்மனிய அரசு 37.5 மில்லியன் டொச் மார்க்குகளை இலங்கை இனவாத அரசிற்கு அன்பளிப்புச் செய்திருக்கிறது. கூடவே இலங்கையில் சமாதானமும், அமைதியும் விரைவில் வந்துவிடும் என்று நம்பிக்கையும் தெரிவித்துள்ளது!.

அப்பாவி மக்கள் மீது போர் தொடுத்துள்ள இலங்கை இனவாத அரசுபோர் விமானங்கள், நேபாம் குண்டுகள் வாங்கிக் குவிக்க அலைந்துகொண்டிருக்கையில் இப்படி காசை அள்ளிக் கொடுத்துவிட்டு சமாதானம், அமைதி பற்றிக் கதைக்கும் ஜேர்மனிய அரசின் யோக்கியதை எப்படியிருக்கிறது?

www.tamilarangam.net

## நம்பிக்கை

கருமேகம் படர்ந்து
பகல் ஒளியை விழுங்கி
காரிருள் சூழ்ந்துவிடும் காலமிது.

நாளைய இரவின் கனவுகளில்
இன்றைய இரவை வீணாக்கமுடியாது.
நேற்றைய இரவும் இப்படித்தான்
தொலைந்து போனது.

உன்னுடன் ஒன்றி
கையணைப்பில் சிறகடிக்கத் துடிக்கும்
உன் காதலிக்கு
இப்பொழுது முத்தமிடு.

நாளைய இரவில்
நானோ, நீயோ
எங்கள் இதழ்களோ
எதுவும் இருப்பது
நிச்சயமில்லை.

நாளைய இரவு
அவர்களுக்கோ
தெரு நாய்களுக்கோ
அல்லது
புதைகுழி நிரப்பும்
ஈர மண்ணுக்கோ...?

*

அலிச்சா (ஈழம்)

www.tamilarangam.net

# போலிகளின் சுய ரூபம்



எந்த ஒரு ஒடுக்கப்படும் சமூகத்தின் மீதும் அதனது அதிகார வர்க்கம் தனது முழு நிர்வாக ஆற்றல்களையும் பயன்படுத்தி போராட்டங்களை மழுங்கடிப்பதுடன் சமூகத்தின் மீதான ஒடுக்குமுறையின் அழுத்தத்தை அதிகரிப்பது வரலாறுகளில் நாங்கள் கற்றுக்கொண்ட அனுபவமாகும். இதற்கு நமது ஒடுக்குமுறையாளர்களும் விதிவிலக்கல்ல. இதற்காக இவர்கள் தொடர்புச் சாதனங்களைப் பெரிதளவு பயன்படுத்தி வருகின்றனர்.

இலங்கைப் பேரினவாத ஆட்சியாளர்கள் இன்று வடக்கு-கிழக்கு இனப் பிரச்சினைக்கு தீர்வாக மொழிப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதே தீர்வு எனப் பறைசாற்றுகின்றனர்.

ஒடுக்கப்படும் சமுகத்தின் மீது காலத்திற்குக் காலம் அது சந்திக்கும் மேலாதிக்கத்தின் தன்மை வேறுபடுகின்றது. இலங்கை அரசுக்கும் வடக்கு,கிழக்கு தமிழ்,முஸ்லீம் மக்களுக்கும் இடையே மொழிரீதியான சட்ட சர்ச்சைகள் இருந்த காலப் பகுதியையும்,தற்போதைய காலப் பகுதியினையும் ஒப்பிடமுடியாது.

இன்று அரசு வடக்கு,கிழக்கு மாகாணங்களில் நிர்வாகத்தைச் செலுத்த முடியாத காலம். வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினை சுயநிர்ணய உரிமை பற்றியது. இதனை அங்கீகரிப்பதற்கும் கொழும்பில் தமிழுக்கு அந்தஸ்து கொடுப்பதற்கும்(!),விழா எடுப்பதற்கும் ஒருவித தொடர்பும் இல்லை. மாறாக இவர்கள் சிங்களத்தை அரச கரும மொழியாக வைத்து முழு இலங்கையிலும் நிர்வாகத்தைச் செலுத்த முடியாத நடைமுறைச் சிக்கல்களை உள் நோக்கியுள்ளனர். "உங்கள் பிரச்சினை மொழி மூலம் தீர்க்கப்பட்டு விட்டது" என்ற அரசின் பிரச்சாரம் தமிழ் மக்களின் போராட்டங்களை, அவர்களின் வாழ்விடங்களில் வாழ்தல் சம்பந்தமாக ஏற்படும் பிரச்சினைகளை மழுங்கடித்து வருகின்றது.

மலையக மக்களினதும்,முஸ்லீம் மக்களினதும் மொழியாக தமிழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தும் அவர்கள் கற்கும் பாட சாலைகளில் சிங்களமொழியிலான பாடவிதான போதனை முறைகளில் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதுடன், முஸ்லீம்,தமிழ் பாடசாலைகளை விட சிங்கள மொழியிலான பாட சாலைகளின் தரத்தினை தமிழ் பேசுபவர்கள் வாழும் தென்னிலங் கையின் பகுதிகளில் உயர்த்தி வரு வதுடன் மறைமுகமாக இனவாத வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றது.

அரசு தனது வடிவத்தில் சிங் கள மொழியின் ஆதிக்கத்தை அடி ப்படையில் வைத்திருப்பதால் மொழிச் சீர்திருத்த நடவடிக்கை கள் கூட அவர்களின் பிரச்சாரத் திற்கான தீர்வாக அமையாது என் பதே உண்மையாகும்.

வடக்கு,கிழக்கு தமிழ் மக்களின் சுயநிர்ணயப் போராட்ட அழிப்பு நடவடிக்கையில் இலங்கையும், இந்தியாவும் கூட்டாகச் சேர்ந்து ஈடுபட்டு வருவது வரலாற்று உண் மையாகும்.இந்திய அரசு,இலங் கையரசு என்ற இரண்டுமே ஏகா திபத்திய நாடுகளின் தூண்களாகும். தெற்கு ஆசியாவில் இந்தியா ஒரு பலம் பொருந்திய வல்லரசாக இருக்க விரும்புகிறது.

இந்திய அரசு பிரதிநிதித்து வப்படுத்தும் பலம் பொருந்திய ஆட்சிப் பகிர்வுக் கட்சிகள் அங் குள்ள முலதனச் செல்வந்த நிறுவ னங்களின் பிரதிநிதிகளாகும்.ஒவ் வொரு கட்சியும் பிரதநிதித்துவப் படுத்தும் முலதன நிறுவனங்கள் வேறுவேறானவை.

இவர்கள் யார் ஆட்சிக்கு வந் தாலும் அவர்கள் பிரதிநிதித்துவப் படுத்தும் கம்பனிகளின் உற்பத்தி தொடர்பான சுரண்டல்கள் இந்தி யாவில் மாத்திரமல்ல ஆசியப் பிராந்தியத்தில் நடைபெறுகின்றன. இதற்கு இலங்கை விதிவிலக்கல்ல.

அது மாத்திரமல்ல,இலங்கைப் பிராந்தியத்தில் உள்ள இயற்கை வளங்களையும்,மையப்படுத்தப்பட்ட புவிசார் நிலைமைகளையும் இந் தியா தனது கட்டுப்பாட்டில் வைத் திருப்பதால் காலத்திற்குக் காலம் தமிழர்களின் போராட்டங்களைத் தன்க்கு சாதகமாக்கி இலங்கையு டன் பேரம் பேசி வருகிறது.

பலமாக இருக்கும் இந்திய அரசு நிறையவே பேரம் பேசி இலங்கையுடன் முரண்பட்டது.இல ங்கையின் ஆளும் அதிகார வர்க் கமோ தான் நடாத்தும் மக்களின் உழைப்புச் சக்தி அபகரிப்பினையும் வளங்களைச் சீர்குலைப்பதினால் உருவாகும் இலாபத்தினையும் இந் திய ஆளும் வர்க்கத்திற்கு விற்ப தில் பின்னிற்கிறது.ஆனால் இந் தியா தமிழீழப் பிரச்சினையைத் தனக்குச் சாதகமாக்கிப் பேரம் பேசுவதில் வெற்றியைக் கண்டுவரு

www.tamilarangam.net

கிறது.

இந்தியா தனதுகைப் பொம்மையாக புலியைவிட E.P.R.L.F, E.N.D.L.F, T.E.L.O., உருவாக்குவதில் வெற்றியடைந்துள்ளது . இவைகளைத் தனக்குச் சாதகமாகப் பேரம் பேசுவதில் பயன்படுத்தி வருகிறது. இலங்கையரசு இந்த இயக்கங்களின் புலி எதிர்ப்புடன் E.P.D.P., P.L.O.T. இயக்கங்களைத் தனது இன அழிப்பு நடவடிக்கைளுக்குப் பயன்படுத்தி வருகிறது.

கடந்த காலங்களில் புலிகள் தமது நலன்களுக்காக இந்திய எதிர்ப்பாக இருந்தபோதும் போராட்டத்தில் அதன் சுயரூபத்தினை சரியானவகையில் அம்பலப்படுத்தவில்லை.தனக்கும், இந்தியாவுக்கும் உள்ள உறவினைக் கூடச் சரியானவகையில் அது தீர்மானிக்கவில்லை.அடிப்படையில் சுயநிர்ணயப் போராட்ட அழிப்பில் புலிகளும் இந்தியாவுக்குத் துணைபோகின்றன என்பதே உண்மையாகும்.

இந்தியா வலிந்து உருவாக்கிக்கொண்ட ஒப்பந்த மும்,நட்புறவு ஒப்பந்தமும் செல்லாமற் போனதற்கு இலங்கை அரசும்,அதனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வர்க்கமும் தம்மை அரசியல் அதிகாரமற்ற அநாதைகளாக்க விரும்பவில்லை என்பதே காரணமாகும். அதாவது தங்களை முற்றுமுழுதான இந்தியாவின் மேலாதிக்கத்திற்கு உட்படுத்த விரும்பவில்லை.ஆனால் இந்தியாவோ அப்படி உருவாக்குவதில் இன்றுவரை உறுதியாகவேயுள்ளது.

கடந்த ஜுன் மாதம் வடக்கு, கிழக்கு மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட அரசியல்,பொருளாதார வன்முறைகளில் இந்தியாவின் உதவிக் கரங்களை 'மறுபடியும்' பலர் எதிர்பார்த்தார்கள்.ஆனால் இந்தியாவோ தனது சுயரூபத்தையே

## நகைச்சுவை !

*இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண்பதில் அரசாங்கம் நாட்டம் கொண்டிருக்கிறது எனக் கருதுவது தவறானது.பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணவே அரசாங்கம் உறுதியாக நிற்கிறது. (பாராளுமன்றத்தில் வர்த்தக,வாணிப அமைச்சர் )*



www.tamilarangam.net

வெளிப்படுத்தியது. இலங்கையுடனான பேரம் பேசுதலுக்காக இன்று தன்னிடம் தஞ்சம் கோரி வந்த இலட்சக்கணக்கான அகதிகளை வெளியேற்றுவதில் பேரம் பேசிவருகிறது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுக்லா சில மாதங்களுக்குமுன் இங்கு வந்திருந்தபோது 'தீர்வு' கொண்டு வருவாரென்றும் பலர் எதிர்பார்திருந்தனர்.ஆனால் சுக்லா கதைத்த விடயங்கள் இந்தியாவின் சுரண்டல் வடிவங்களுக்கான பேரம் பேசல்களாகும்.இதற்காக அவர் வடக்கு,கிழக்கு மக்களின் போராட்டத்தில் இலங்கை கடைப்பிடித்து வரும் கொள்கையை முற்றுமுழுதாகவே ஏற்றுக்கொண்டார்.ஒரு சம்பிரதாயத்திற்காக இராணுவ நடவடிக்கைகளை பொதுமக்களுக்கு எதிராகப் பாவிக்க வேண்டாம்,பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீருங்கள் எனக் கூறியதோடு புலி தவிர்ந்த தமது கைப்பொம்மைகளுடன் பேசித் தீர்வு காணுங்கள் என்றும் கூறியுள்ளார்.

இவர்களுக்கு இடையில் நடைபெற்ற பேரம் பேசலின் ஒரு பகுதியாக இந்தியாவிடமிருந்து அங்கு உற்பத்தியாகும் முதலீட்டுச் சாதனங்கள்,விவசாய மருந்து வகைகள், கருவிகள்.. என்பவற்றை இறக்குமதி செய்வதன் மூலம் ஒரு சந்தையை இங்கு இலங்கை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது .ராஜீவின் ஆட்சியில் இந்திய இராணுவம் எமது மண்ணில் இருந்தபொழுது வரியில்லாமல் வெஸ்பா ஸ்கூட்டர்கள்,சைக்கிள்களை இலங்கை இறக்குமதி செய்ய இங்கு ஏஜென்டுகளுக்கு விட்டுக் கொடுத்ததன் தொடர்ச்சியே இவைகளாகும்.


இலங்கை அரசு இவற்றுக்கெல்லாம் தீர்வாக தமிழ் மக்களிற்கு அதன் அரசியல் வடிவத்தின் அடிப்படையில் தீர்வினை வழங்க முடியாது.இவ்வாறான முரண்பாடுகள் ஈழத்தில் உறுதியான போராட்ட வடிவங்கள் உருவாகும்வரை இருந்துகொண்டேயிருக்கும்.

புலிகள் அரசுடன் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினையான சுயநிர்ணய உரிமையின் அங்கீகாரத்திற்கு பேசாமல் வெறுமனே அரசியல் ஆட்சி மாற்றத்திற்காகப் பேசுகின்றனர்.தமிழீழக் கோரிக்கையைக் கைவிடுவதாகவும், ஒற்றையாட்சியில் தீர்வினை எதிர்பார்ப்பதாகவும் 02.02.1991 The Island பத்திரிகையில் யோகியின் பேட்டியின்படி முடிவெடுத்துள்ளனர்.

அண்மைக்காலங்களில் போராட்டத்தை ஒடுக்கும் நடவடிக்கையில் புலி இலங்கையரசின் வெற்றிக்கு முட்டுக்கட்டையாக இருந்ததைவிட காரணகர்த்தாக்களாகவே விளங்கி வருகின்றது.

– தவம் (ஈழம்)

www.tamilarangam.net




01.10.1991 (வீ)

அரசியல் பேச்சுவார்த்தைக் கான முயற்சிகள் ஒருபுறம் நடக்கும் அதேவேளை நமது ஆயுதப் போராட்டமும் தொடரும். அதைக் கைவிட்டுவிட்டதாக யாரும் நினைக்கக் கூடாது – புலிகள்

நாளாந்தம் பறிக்கவேண்டியிருந்த 16 கிலோ கொழுந்தை 22 கிலோவாகக் கூட்டியிருப்பதாலும், ஞாயிற்றுக்கிழமை வேலை செய்தால் 24 கிலோ கொழுந்து பறிக்கவேண்டுமெனவும் அக்கரபத்தன தோட்ட நிர்வாகம் அறிவித்ததையடுத்து சுமார் 1,500 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

02.10.1991 (வீ)

பெருந்தோட்டத் தொழிற்துறையை தனியார்மயப்படுத்துவதால் அந்நியக் காலனித்துவமுறை மீண்டும் புதியவடிவில் தோட்டத் தொழிலாளிகள் மீது திணிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இத்துறையில் கிடைத்துவந்த வருமானத்தின் பெரும்பகுதி தனியாரின் கைகளுக்கே சென்றடைய வழி செய்யப்பட்டுள்ளது.

புலிகளுடன் எந்தரீதியிலாவது அரசு பேச்சுவார்த்தை நடத்துமானால் அதனையிட்டு தமது அமைப்பு ஆழ்ந்த அதிருப்தியை கொண்டுள்ளதாகவும், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த தொண்டமான் யாழ்ப்பாணம் போவதாயின் அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்றும் அகில இலங்கை சிங்கள பௌத்த அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

03.10.1991 (வீ)

கிழக்கு மாகாணத்திற்குக் கொண்டுசெல்லப்படும் தடைவிதிக்கப்படாத பொருட்களும் இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்படுகின்றன.

1987ஆம் ஆண்டு மேமாதம் 19ஆம் திகதி தொலைக்காட்சியில் இனப்பிரச்சினை தொடர்பாக பகிரங்கமாக விவாதம் செய்த புலிகள் இயக்க லண்டன் கிளைத் தலைவர் சத்தியமூர்த்தி தற்போது கொழும்பில் மெரிடியன் ஹோட்டலில் தங்கியிருந்து, கைது செய்யப்பட்டுள்ள புலி இயக்கப் பிரமுகர்களை விடுதலை செய்வது தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்திவருகிறார். இவருக்கு 24மணி நேர பாதுகாப்பு வழங்கப்பட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டுள்ளது.

04.10.1991 (வீ)

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட எல்லைக் கிராமமான 13 ஆம் குடியேற்றக் கிராமத்தில் 13 தமிழர்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளனர். ஒரு பெண் பலாத்காரப்படுத்தப்பட்ட பின்னர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார். இச் சம்பவத்தையடுத்து அப் பகுதியைச் சேர்ந்த 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அயல் இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் அறுவடையாகும் நெல்லை ஊர்க் காவற்படையினர் அபகரித்துச் செல்கின்றனர்.

அகதி முகாம்களிலிருக்கும் அம்பாறை மாவட்ட தமிழ், முஸ்லீம் மக்களின் குடியிருப்புகள் அழிக்கப்படுவதுடன் அவர்களின் விவசாயக் காணிகள் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. தமது நிலங்களைப் பார்க்கச் சென்றவர்கள் சிலர் காணாமற் போயுள்ளனர்.

தற்போதைய யுத்தத்தில் புளொட் எமக்குத் தகவல்கள் தந்து உதவுகிறது - பாதுகாப்புப்படைப் பேச்சாளர்

06.10.1991 (ஒ)

ராஜீவ்காந்தியைப் புலிகளே கொலை செய்தனர் என இந்திய வட்டாரங்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்துவருவதன் எதிரொலியாக மொரிஷியஸில் இலங்கைத் தமிழ்த் தொழிலாளர்கள் அந் நாட்டவரால் மோசமாக நடாத்தப்பட்டு வருகின்றனர். 500க்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ்ப் பெண்கள் தையல் நிலையங்களில் தொழில் புரிந்து வருகிறார்கள். இவர்கள் இலங்கையிலிருக்கும் தமது குடும்பத்துக்கு பணம் அனுப்ப முடியாமல் இவர்களின் பணத்தை வங்கிகள் ஏற்று அனுப்பிவைக்க மறுத்து வருகின்றன.

06.10.1991 (வீ)

கப்பல் மூலம் காங்கேசன் துறைக்குக் கொண்டுவரப்பட்ட உணவைப் பொறுப்பெடுக்க யாழ் அரசாங்க அதிபருக்குப் புலிகள் அனுமதி வழங்கவில்லை.

07.10.1991 (வீ)

கச்சதீவு இலங்கைக்கு கையளிக்கப்பட்டிருக்கக் கூடாது. அத் தீவு இந்தியாவின் ஒரு பகுதியாக தொடர்ந்திருக்க வேண்டும் - கருணாநிதி

சமீப காலத்தில் கொரிய-இலங்கை வர்த்தக உறவுகள் பலவகைகளில் விரிவடைந்துள்ளன. சென்ற வருடம் கொரியா இலங்கைக்கு 17

www.tamilarangam.net

கோடி 10இலட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்து, 2 கோடியே 30இலட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களை இறக்குமதி செய்துள்ளது - கொரிய தூதுக்குழு

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அரசியலமைப்புச் சட்டத்தில் பூரண பாதுகாப்பளிக்கப்பட்டிருப்பதால் அதற்கு எதிராக சட்ட நிர்வாக நிறைவேற்று அதிகார நடவடிக்கைகள் எதையும் எடுக்க முடியாது - கொழும்பு பாரிய பொருளாதார ஆணைக்குழு

08.10.1991 (ஐ)

மேர்ஜ்ஜின் சிங்கள மொழிப் பத்திரிகையான "யுக்திய" அச்சிடப்படும் அச்சகத்தைப் பொலிஸார் மூடியுள்ளனர். இதன் பின்னர் இனந்தெரியாத நபர்களினால் இந்த அச்சகம் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது. "சூதாட்ட அரசன் ஜோவும், பிரேமதாசா குழுவும்" என்ற தலைப்பில் பிரசுரம் ஒன்று அச்சிடப்பட்டுக்கொண்டிருந்த நேரத்திலேயே இச் சம்பவங்கள் நடந்துள்ளன. கடத்தல், போதைவஸ்து, சூது, விபச்சாரம் போன்றவற்றில் ஈடுபட்ட ஜோ என்ற வெளிநாட்டவனுக்கும், இலங்கையரசுக்கும் உள்ள கள்ளத் தொடர்பை அம்பலப்படுத்தியே இப் பிரசுரம் எழுதப்பட்டிருந்தது.

அக்கரைப்பற்றில் கைது செய்யப்பட்டவர்களில் 32 பேரை முகாமில் சிறைப்படுத்தி வைத்திருக்கும் அதிரடிப்படையினர் அவர்களின் மூக்கில் உப்புத் தண்ணீரை ஊற்றி வதைப்பது உட்பட கொடூரமான சித்திரவதைகளெல்லாம் செய்துள்ளனர். அவர்களைப் பார்க்க அவர்களின் மனைவி, பிள்ளைகள் கூட அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் உயிருடனிருக்கிறார்களா என்பதை நிச்சயிக்கமுடியாதுள்ளது.

தம்பட்டைக் கிராமத்தைச் சுற்றிவளைத்த அதிரடிப்படையினர் வீடுகளிலிருந்த சகல ஆண்களையும் லொறிகளில் ஏற்றி முகாமுக்குக் கொண்டு வந்து சித்திரவதை செய்துள்ளனர். இதில் எத்தனைபேர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பது இதுவரை தெரியவில்லை.

08.10.1991 (வீ)

பிரேமதாசாவுக்கு எதிரான ஒழுக்கவழுவரை செல்லுபடியாகக்கூடிய தேவையானளவு கையெழுத்துகளைக் கொண்டிருக்கவில்லை என்று காரணம் காட்டப்பட்டு சபாநாயகரால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

10.10.1991 (வீ)

வாழைச்சேனை, புதுக்குடியி

www.tamilarangam.net

ருப்பு. பேய்த்தாழை ஆகிய பகுதிகளில் இராணுவத்தினரால் இயக்கத்தில் இருப்பதாகக் கூறப்படும் இளைஞர்களின் சகோதரர்கள் கைது செய்யப்பட்டுக் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர். இவர்களில் திருமணமானவர்களே அதிகமாகவுள்ளனர். கைதானவர்கள் எங்கே தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் என்ற தகவல் இதுவரை வெளியாகவில்லை.

10.10.1991 (டெ)
ஜனவரி 1989 தொடக்கம் யூன் 1991 வரையில் 12,815 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

11.10.1991 (வீ)
வுனியாவிலிருந்து தாண்டிக்குளம் ஊடாக வடபகுதிக்குச் சைக்கிளில் செல்வதோ, சைக்கிளைக் கொண்டுசெல்வதோ இராணு வத்தினரால் தடை செய்யப்பட்டுள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தமது போக்குவரத்திற்கு சைக்கிள் வண்டிகளை உபயோகித்துவரும் வடபகுதி மக்களுக்கு இத்தடையுத்தரவு பெரும் அதிர்ச்சியளித்துள்ளது.

கடந்த வருடத்தில் கிழக்கில் மட்டும் காணாமற் போனோர், இறந்தோரின் தொகை 6,021.

12.10.1991 (வீ)
எமது இளந்தலைமுறையினர் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் இராணுவத்தினரைப் பார்த்துப் பின்பற்றி வழிநடக்கக் கூடியவகையில் இராணுவ சேவையை நாம் புதிய வகையில் பயன்படுத்துவதற்குத் திட்டங்கள் தீட்டப்போகிறேன் - பிரேமதாசா

பதுளைப் பகுதியில் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தபோது விபத்தில் சிக்கிய தொழிலாளி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு வாகன வசதியில்லாததால் மரணமானார்.

சபாநாயகர் முஹம்மதுவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 38 வாக்குகளால் தோல்வியடைந்துள்ளது. ஐ.தே.க., மு.கா., த.வி.கூ., ஈரோஸ்., ஈ.என். டி .எல்.எவ் உறுப்பினர்கள் பிரேரணையை எதிர்த்து வாக்களித்துள்ளனர்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையே நெருக்கமான தொடர்புகள் நிலவுவதாகவும், அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் இந்த உறவு மேலும் வலுவடையும் எனவும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்தின் தலைவர் கூறியுள்ளார்.

ஏறாவூரில் ஊர்க்காவற்படையினரால் கடத்தப்பட்ட தமிழர் கிணறொன்றில் சடலமா

www.tamilarangam.net

கக் கண்டெடுக்கப்பட்டார்.

14.10.1991 (வீ)

இங்கு வந்து பார்த்த பின்பு தான் உண்மை நிலையை அறியக் கூடியதாயிருக்கிறது. உங்கள் கண்ணீர்க் கதையைக் கேட்கும்போது மிகவும் வேதனையேற்படுகிறது - இலங்கைக்கு வந்த ஐ.நா.மனித உரிமைகள்குழு

சேலம், செங்கற்பட்டு முகாம்களில் 1090 தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ராஜீவ் கொலை தொடர்பான வர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 200 போராளிகள் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

15.10.1991 (வீ)

மட்டக்களப்பு அருகேயுள்ள வீச்சுக்கல்முனை அகதிமுகாமில் 181 மலையகத் தோட்டத் தொழிலாளர் குடும்பங்கள் போதிய உணவு நிவாரணமின்றியும், தொழில் வசதிகள் எதுவுமின்றியும் வாடுகின்றன.

16.10.1991 (வீ)

இறக்குமதி செய்யப்பட்டுள்ள 25 நவீனரக கவச வாகனங்கள் கப்பல் மூலமாக திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. மிகவும் சக்தி வாய்ந்த இக் கவச வாகனங்கள் ஒவ்வொன்றினதும் விலை 40 இலட்சம் ரூபாய்கள்.

அமைச்சரவைத் தீர்மானத்தையடுத்து "சிம்பத் " என்ற இஸ்ரேலிய நிபுணர்கள் எமது வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு உதவினார்கள் - லலித்

18.10.1991 (வீ)

தென்னிலங்கைக் களியாட்டங்களுக்கு செலவிடும் பணத்தை அரசாங்கம் புலிகளை ஒழிக்கப் பயன்படுத்தினால் எவ்வளவோ நன்றாயிருக்கும் - சு.க

19.10.1991 (வீ)

யாழ் மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குண்டுவீச்சு விமானங்களும், இயந்திரத் துப்பாக்கிகள் பூட்டிய ஹெலிகளும் தாக்குதலில் ஈடுபட்டுள்ளன.

அக்கரைப்பற்றில் பாடசாலையொன்றின் வருடாந்த பரிசளிப்புவிழா நடந்துகொண்டிருந்த போது அப் பாடசாலையை முற்றுகையிட்ட அதிரடிப்படையினர் விழாவில் பரிசு பெறக் காத்திருந்த மாணவர்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டவர்களைக் கைது செய்துகொண்டு சென்றுள்ளனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையை இந்தியாவின் ஒத்து

www.tamilarangam.net

ழைப்பு, உதவியின்றி தீர்க்க முடியாது. இந்தியாவுக்குத் தடிமல் ஏற்பட்டால் கூட இங்கு அது ஒருசில மணி நேரத்திற்குள் பரவிவிடும். இந்திய அமைதி காக்கும் படையினர் இங்கு வந்து தம துயிரை தியாகம் செய்தது இந்தியாவின் நன்மைக்காக அல்ல. எமது நாட்டின் நன்மைக்காகவே - ஈ.பி.ஆர்.எல்.எவ்

20.10.1991 (வீ)

யாழ்நகரைக் கைப்பற்ற ஒபரேஷன் வலம்புரி என்ற பெயரில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பூநகரியில் ஹெலி தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

21.10.1991 (வீ)

எழுவைதீவு, அனலைதீவு, புங்குடுதீவு ஆகிய தீவுப் பகுதிகளை ஆக்கிரமித்திருக்கும் இராணுவத்தினர் மண்டைதீவில் தமது நிலைகளை ஸ்திரப்படுத்துவதுடன் பண்ணை வழியாக யாழ்நகருக்குள் வருவதற்கான முயற்சியில் இறங்கியுள்ளனர்.

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 22 தமிழர்கள் தாங்கள் இதுவரை எதுவித விசாரணையுமின்றி காவலில் வைக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்து உண்ணாவிரதமிருந்து வருகிறார்கள்.

1981ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாவட்ட சபைத் தேர்தல்களின்போது வெளியிடங்களிலிருந்து ஆட்களைக் கொண்டுசென்று அவற்றைக் குழப்பியடித்தவர். யாழ் நூல்நிலையத்தை எரித்தவர் காமினி திஸநாயக்க தான் - பிரேமதாச

24.10.1991 (வீ)

இலங்கையின் வடக்குக்-கிழக்குப் பிரதேசத்தைப் பிரித்து தனியான அரசமைக்க தமிழ்ப் பயங்கரவாதிகள் போராடி வருகின்றனர். மறுபுறத்தில் சிங்கள பௌத்தர்களை வேறு மதங்களுக்கு மாற்றும் ரகசிய வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆதலினால் சிங்களவர்களாகிய நாம் அனைவரும் நமக்காகவுள்ள ஒரே நாடான ஸ்ரீலங்காவையும், சிங்கள இனத்தையும், பௌத்த மதத்தையும் ஒன்றிணைத்து பாதுகாக்கும் பொருட்டு இரவும், பகலும் விழிப்புடனிருக்க வேண்டும். நம் நாட்டின் சிங்கள இராணுவ வீரப் புதல்வர்கள் தமிழீழம் அமைப்பதற்காகப் போராடிவரும் தமிழ்ப் பயங்கரவாதிகளுடன் மிகத் தீரமுடன் போராடி இம்முறையும் நம் நாட்டையும், இனத்தையும், மதத்தையும் காத்துள்ளார்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை - மகா போதி சங்கத் தலைவர் காமினி ஜயசூரிய

முழுக்க முழுக்க தமிழ் மாணவர்கள் கல்வி பயிலும் தமிழ்ப் பாடசாலைகளில் தேசிய கீதம் சிங்களத்திலேயே பாடப்பட வேண்டும் என பண்டாரவளைத் தொகுதியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு யூன் மாதம் முதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு "காணாமற் போனோர்" அல்லது "கொலை செய்யப்பட்டிருக்கலாம்" எனச் சந்தேகிக்கப்படுபவர்களின் தொகை 2.750.

இராணுவத்தினர் திடீர் திடீரெனத் தமிழ்க் கிராமங்களைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்துவதும், விசாரணைக்கென்று பலரைக் கொண்டு செல்லுவதும், இதில் ஒரு பகுதியினரை விடுவித்துவிட்டு மறுபகுதியினரைத் தடுத்து வைப்பதும் நாளாந்தம் நடைபெற்று வருகிறது.

25.10.1991 (வீ)

புலிகள் இயக்கத்தை இராணுவரீதியில் பலவீனப்படுத்துவதே இன்றைய இராணுநடவடிக்கையின் நோக்கம். இந்நோக்கம் நிறைவேறினால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது என்ற பேச்சுக்கே இடமில்லை - கூட்டுப்படைத் தலைமையகம்

மாவட்ட அபிவிருத்தி அதிகார மாற்றங்களுக்கான தேர்தல்கள் நடாத்தப்பட்ட திகதிக்கு முந்தியநாள் காமினிதிஸநாயக்க ஏராளமானவர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் சென்று வாக்குப்பெட்டிகளைச் சேகரித்து கள்ள வாக்குகளைப் போடச் செய்தார் - பிரேமதாச

26.10.1991 (வீ)

யாழ்குடாநாட்டிலே இன்று மக்கள் வீடுகளில் இல்லை. கோயில்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடைந்திருக்கிறார்கள். அவர்களை அவ்வாறு தஞ்சமடையச் செய்துவிட்டு தஞ்சமடைந்திருக்கும் இடங்களுக்கே விமானங்கள் மூலம் குண்டு வீசப்படுகிறது.

1989ஆம் ஆண்டு மே மாதம் மணலாறில் வைத்து புலிகளுக்கு 2 லொறிகளில் துப்பாக்கி ரவைகள் மற்றும் ஆயுதங்கள் வழங்கப்பட்டன. திறைசேரியிலிருந்து இதற்காக நிதி பெறப்பட்டதா என்பது கண்டறியப்படவேண்டும் - ம.ஐ.மு

அவசரகாலசட்ட நீடிப்புக்கு ஐ.தே.க, மு.கா., ஈரோஸ்.,

www.tamilarangam.net

ஈ.என்.டி.எல்.எவ்.. ரெலோ ஆகியவற்றைச் சேர்ந்தோர் ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

புலிகளால் தடுத்துவைக்கப் பட்டிருக்கும் முஸ்லீம்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யவேண்டு மென்று செஞ்சிலுவைச் சங் கத்திடம் கோரப்பட்டுள்ளது. சகல உடைமைகளும் பறிக் கப்பட்ட நிலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்த யாழ் முஸ்லீம்களை விடுவிக் கச் சென்ற உறவினர்களிடம் 25, 30 இலட்ச ரூபாவைத் தந்துவிட்டு அழைத்துச் செல் லுமாறு புலிகள் கோரியிருக் கிறார்கள்.

27.10.1991 (வீ)

மட்டக்களப்பில் 5 தமிழர்கள் அரபடைகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

28.10.1991 (வீ)

1981 குடிசன மதிப்பீட்டின்படி இணைந்த வடக்கு-கிழக்கில் சிங்களவர்கள் 13.2 சதவீதத் தினராக இருந்தனர். மகாவ லித்திட்ட அபிவிருத்தியின் பின்னர் இவர்களின் தொகை 16-17 சதவிகிதமாக அதிக ரித்திருக்கும் என எதிர்பார்க் கலாம். தொண்டமான் ஒரு மகத்தான ஜனநாயகவாதி என்றால், எந்தவிதமான குற் றச்சாட்டும், விசாரணையு மின்றி தடுப்புக் காவலில் இரு க்கும் சந்திரசேகரனை விடு தலை செய்விக்க வேண்டும். இ.தொ.கா.வுக்கு அச்சுறுத் தலாக சந்திரசேகரன் விளங் குவதால்தான் அவர் தடுப்புக் காவலில் இருப்பதை தொண் டமான் விரும்புகிறார் - சு.க

புலிகளை அடக்கி ஒடுக்கும் பணியில் ஈடுபட முஸ்லீம்களு க்கு " பதுர் " என்ற தனி யான இராணுவப்பிரிவையும், தமிழர்களுக்கு " வலம்புரி " என்ற இராணுவப்பிரிவையும் உருவாக்குங்கள். தேசிய நெருக்கடி மிக்க இச் சந்தர்ப் பத்தில் முஸ்லீம் காங்கிரஸ் அரசை ஆதரிக்க ஆரம்பித் துள்ளது. முதலில் நாட்டைக் காப்போம். பின்னர் சொந்த நலன்களைப் பற்றிச் சிந்திப் போம் - மு.கா

29.10.1991 (வீ)

இராணுவத்தினருக்குச் சமைத் துக் கொடுத்தனர் என்றும், பாதை காட்டிக் கொடுத்தனர் என்றும் குற்றம் சுமத்தப்பட்டு கனகராயன் குளத்தைச் சேர் ந்த இருவரைப் புலிகள் கொன்றுள்ளனர்.

தாம் குடியிருக்கும் வீட்டுக்கு முன்னால் தற்காலிகக் குடிசை அமைத்துள்ளனர் என்பதைக் காரணம் காட்டி 5 தொழிலா ளர்கள் தோட்ட நிர்வாகத் தால் வேலையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

www.tamilarangam.net

# ஒன்றுபட்டால்....

"எங்கள் பணத்தில் போலி அகதிகள்"

"வெளிநாட்டவரை விரட்டு"

புதிய நாஸிகளின் மேற்படி எதிர்ப்புகளுடன், வரி அதிகரிப்புக்குக் காரணம் அகதிகளே என்ற ஐரோப்பிய அரசுகளின் நாஸி ஊக்குவிப்புகள் பரவலாகிவரும் நெருக்கடி நேரத்தில் கடந்த 21.09.191 அன்று விற்றன், போகும் நகரங்களின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அகதிகள் குழுக்களாலும், இந் நகரங்களைச் சேர்ந்த ஜேர்மனியர்களின் அகதி ஆதரவுக் குழுக்களும் "எல்லைகளைத் தகர்த்தல்" என்ற அடிப்படைக் கோஷத்தின் கீழ் ஆர்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தினர்.

சுமார் 60பேர் கலந்துகொண்ட இவ்வூர்வலத்தில் குர்திஸ்தான், துருக்கி, யூகோஸ்லாவியா (றோமா), இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த அகதிகளும் சுமார் 30 ஜேர்மனியர்களும் கலந்துகொண்டனர். பகல் 12 மணிக்கு ஊர்வலம் ஆரம்பமாகும் என அழைப்பிதழில் அறிவிக்கப்பட்டிருந்தாலும், அந் நேரத்தில் வந்திருந்தவர்களின் தொகையைக் கணக்கிலெடுத்து மேலும் பலரின் வருகைக்காக அனைவரும் காத்திருந்தனர். இடையிலே எண்ணிக்கைக் குறைவைக் காரணம் காட்டி ஊர்வலத்தை நிறுத்தி நிகழ்ச்சி மண்டபத்திற்கு நேரே போகலாமா என்றும் கூட ஆலோசிக்கப்பட்டது. ஊர்வலம் பற்றிய பிரசுரம் தெருவெங்கும் தமிழ் உட்பட பல மொழிகளில் ஒட்டப்பட்டு குறிப்பிட்டளவு அறிவிக்கப்பட்டிருந்தாலும், ஊர்வலத்தில் 10 தமிழர்களே கலந்துகொண்டதானது (இவ்வாறான நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளாமைக்கான காரணங்களைப் பலர் கைவசம் வைத்திருக்கிறார்கள்!) கலந்துகொண்டவர்களுக்கு வேதனையுடன் கூடிய ஊக்கத்தைக் கொடுத்தது.

ஊர்வலம் 12.30 மணியளவில் போகும் லங்கன்டிரயர் புகையிரத நிலையத்திலிருந்து ஆரம்பமாகி சுமார் 13.45 மணியளவில் விற்றன் வேக் ஸ்ரட்டில் முடிவடைந்தது.

"ஜேர்மனியக் கப்பல் நிரம்பி

www.tamilarangam.net

விட்டதா?நல்லது!","கொல்வதற்குப் பலவழி, இலங்கைக்குத் திருப்பிய னுப்புதல் ஒரு வழி","நாடுகடத்தல், என்பது சித்திரவதை,நாடுகடத்தல் என்பது கொலை","இலங்கையில் எண்ணெய் இல்லை,அதனால் சர்வ தேச கவனம் அங்கில்லை","அகதி களை மனிதர்களாக நடாத்து"என்பது போன்ற சுலோகங்களையும், கோஷங்களையும் ஊர்வலம் கொண்டிருந்தது.

ஜேர்மனிய அரசு மூன்றாம் உலக நாடுகளைச் சுரண்டி தன்னை வளர்த்துக்கொண்டு, அகதிகளால் பணம் செலவழிவதாக நடிப்பதையும்,இன்றைய ஜேர்மனிய அரசின் சட்டங்கள்,நடவடிக்கைகள் யாவும் பச்சையாகவே நிறவாதத்தையும், இனவாதத்தையும் அடிப்படையாகக் கொண்டவை என்பதையும் மையமாக வைத்து எழுதப்பட்ட பிரசுரங்கள் ஊர்வலத்தில் எதிர்ப்பட்டவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது.அத்துடன் ஒலிபெருக்கியிலும் தொடர்ந்து வாசிக்கப்பட்டது.

ஊர்வலத்தின்போது பாதையில் எதிர்ப்பட்டவர்களினதும்,வீடுகள், கடைகளிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தவர்களினதும் பிரதிபலிப்புகளைக் கவனித்தபோது நிறவாதம் எவ்வளவு தூரம் ஆழமாக வேர் விட்டுள்ளதென்பதையும், அகதிகளுக்கெதிரான பிரச்சாரம் எவ்வளவு தூரம் மக்களைச் சென்றடைந்துள்ளது என்பதையும் கண்டுகொள்ள முடிந்தது.பிரசுரங்களைக் கொடுத்தபோது பலர் படித்துப் பார்க்காமலே அதிலேயே வைத்துக் கிழித்தெறிந்தனர்.ஒலிபெருக்கியில் அறிவித்தபோது காதுகளைப் பொத்திக்கொண்டார்கள். " அகதிகளே வெளியேறுங்கள்"என்று கடைகளுக்குள்ளிருந்தும் ,வீடுகளுக்குள்ளிருந்தும் கத்தினார்கள்.கோட்,சூட் போன்ற கனவான் உடை அணிந்திருந்த ஒருவர் ஆத்திரத்துடன் வந்து! ஊர்வலமாய்ப் போய்க்கொண்டிருந்தவர்களைத் தள்ள முயற்சித்தார்.

ஊர்வலம் முடிவடைந்த மண்டபத்தில் மதிய உணவுடன் கருத்துகளும் பரிமாறப்பட்டன.இலங்கை,குர்திஸ்தான் நாட்டு உணவுவகைகள் பரிமாறப்பட்டன.புத்தகக் கண்காட்சியுடன்,புத்தக விற்பனையும் நடந்தது.

இதனைத் தொடர்ந்து இலங்கைப் பிரச்சினை பற்றிய விவரணப் படக்காட்சி தென்னாசிய நிறுவனத்தாரால் காண்பிக்கப்பட்டது. உல்லாசப் பிரயாணிகளின் வருகையானது 1989ஆம் ஆண்டிற்குப் பின்னர் இருமடங்காக அதிகரித்திருப்பதாகவும்,இதில் அரைப் பகுதிக்கும் மேலானோர் ஜேர்மனியர்களே என்றும்,இலங்கையரசு தனது காட்டுமிராண்டித்தனத்தைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கும் பகுதிகளுக்குச் செல்ல உல்லாசப் பிரயாணிகளை அனுமதிக்காததால்,இந்த

www.tamilarangam.net

உல்லாசப் பிரயாணிகள் மூலம் இலங்கைப் பிரச்சினை மூடிமறைக் கப்படுகிறது எனவும் தென்னாசிய நிறுவனம் சார்பாகக் கலந்து கொண்ட வால்ற்றர் கெலர் கூறி னார்.மேலும் தமிழ்மக்களின் போராட்டம் பற்றிய கேள்வியொன் றுக்குப் பதிலளிக்கையில்,ஒரு கால த்தில் தமிழ்மக்களின் விடுதலைக் காகத்தான் தமிழ் இயக்கங்கள் போராடுகின்றன என்று நம்பக் கூடியதாக இருந்தது,நானும் நம்பி னேன்,ஆனால் இன்று அந்த நிலை மாறிவிட்டது,அனைத்து இயக்கங் களும் தமது இருப்பைப் பிரதானப் படுத்தி தமது சுய லாபங்களுக் காக மக்களைப் பலிகொடுக்கின் றன எனக் கூறினார்.

விவரணப் படக்காட்சியைத் தொடர்ந்து விற்றன் தமிழ்க் கலை க்குழுவினால் "பிரச்சினை" என்ற மெளனநாடகம் அரங்கேற்றப்பட் டது.இலங்கையில் அரசின் ஒடுக்கு முறை, அரச பயங்கரவாதம் ,இத னால் பாதிக்கப்படும் மக்களின் நிலைமை, அகதியாக நாட்டை விட்டுத் தப்பியோடவேண்டிய நிலை மை, மேற்கைரோப்பாவில் அகதி கள் மீதான ஒடுக்குமுறை, நாஸிக ளின் தாக்குதல் ,உல்லாசப் பிரயா ணிகளின் பொய்யான பிரச்சாரம் இலங்கையரசுக்கான மேற்கைரோ ப்பிய நாடுகளின் ஆயுத-நிதி உதவி என்பவை நடித்துக் காட்டப் பட்டன.குறிப்பிட்ட நேரத்திற்குள் ளும்,வாய் பேசாமலும் ,ஒப்பனை இல்லாமலும் அதிகார வர்க்கத் தின் நயவஞ்சகங்களை தெளிவாக எடுத்துக்காட்டிய விற்றன் தமிழ்க் கலைக்குழுவினர் பாராட்டுக்குரிய வர்கள் .இந் நாடகத்தில் இலங் கையர்களாக தமிழர் களும்,மேற் கைரோப்பியர்களாக ஜேர்மனியர்



www.tamilarangam.net

களும் இணைந்து நடித்ததும் குறிப் பிடத்தக்கது.

இந் நாடகத்தை ஜேர்மனியின் பல பாகங்களிலும் நடத்த இருப்ப தாக டொச்-வெளிநாட்டவர் நட் புறவுக் கழகத்தைச் சேர்ந்தவர் கூறினார். இதற்கிணங்க விற்றன் தமிழ்க் கலைக் குழுவினரும் ஒத் துழைத்து அதிகாரவர்க்கத்தின் சுயரூபங்களை வெளிக்கொணர வேண்டும்.

நாடகத்தைத் தொடர்ந்து, PKK என்ற குர்திஸ்தான் ஆயுத இயக்கத்தின் மீது ஜேர்மனியில் தொடரப்பட்ட வழக்குப் பற்றி சட்டத்தரணி ஹின்ஸ் விபரித்துக் கூறினார். தங்கள் சொந்தநாடு களின் ஆயுதந் தாங்கிய இயக்கத்திலுள்ளவர்கள் அல்லது அதனைச் சார்ந்தவர்கள் ஜேர்மனியில் இருந்தால் அவர்களு க்கு ஜேர்மனியில் தண்டனை வழங் கவோ அல்லது அவர்களை அவர் களின் நாட்டு அரசாங்கங்களிடம் ஒப்படைக்கவோ இடமளிக்கக்கூடி யதாக சட்ட திருத்தத்தை ஜேர்ம னிய அரசு மேற்கொள்வதாகவும், இதன் ஆரம்ப நடவடிக்கையாக ஜேர்மனியிலுள்ள PKK இயக்க தைச் சேர்ந்தவர்கள் கைது செய் யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவ தாக சட்டத்தரணி கூறினார். மேலும், ஒரு இயக்கம் பயங்கர வாத இயக்கமே என்று குற்றம் சாட்ட ஜேர்மனிய அரசு வைத்திரு க்கும் காரணங்கள் அந்த இயக் கம் ஆயுதம் வைத்திருப்பது, அவ் வியக்கம் இடதுசாரிக் கொள்கைக ளைப் பின்பற்றுவது என்பனவாகும். நேட்டோ அமைப்பில் துருக்கி இரு ப்பதால் ஜேர்மனிய அரசு PKK மீதான நடவடிக்கையில் அதிக அக் கறை காட்டுவதாகவும், இந் நடவ டிக்கைகள் இலங்கை, இந்தியா என அனைத்து மூன்றாம் உலக நாடுகளிலுள்ள இயக்கங்களையும் 'பயங்கரவாதம்' என்ற அமைப்புக் குள் கொண்டு வந்து, அந்தந்த நாடு களின் ஒடுக்குமுறை அரசுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுவரை தொடரப்போகிறது எனவும், இதன் மூலம் அரசுகளே ஆயுதங்களை வைத்திருக்கலாம், அரசை எதிர்த் துப் போரொடுபவர்கள் வைத்திரு க்க முடியாது என்பதாக இருப் பதால் அரசுகளைப் பாதுகாப் பதற்கான நடவடிக்கையே எனவும் சட்டத்தரணி விளக்கினார்.

அதிகார வர்க்கங்களும், அதன் தொலைதொடர்பு சாதனங்களும் அடக்கி ஒடுக்கப்படுபவர்களிடம் தமது கைவரிசையைச் செம்மையா கக் காட்டிவரும் இவ்வேளையில் அதற்கெதிராக எம்மாலியன்றளவா வது எதிர்ப்புகளையும், உண்மை நிலைகளையும் தெரிவித்தாக வேண் டும். பெருகிவரும் புதிய நாஸிக ளின் நடவடிக்கைகளும், எமது நாட் டின் நிலைமைகளும் எம் அனைவரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளதும் வாழ்வைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. இந் நிலையில் விற்றன் -போகூம் அகதிகள் குழுவினதும், அவற்றின் ஆதரவுக் குழுக்களினதும் இந் நடவடிக்கை அவசியமானது, ஆக்கபூர்வமானது என்பதோடு இவ்வாறான நடவடிக்கைகள் தொடரப்படுவதும் தவிர்க்க முடியாதது.

* ராஜன் *

---

# சுத்தம் செய்யும் அழுக்குகள்!

கொழும்பிலும், கொழும்பையண்டிய பகுதிகளிலும் பிச்சையெடுத்துக்கொண்டிருந்தவர்களையும், அகதி முகாம்களில் இல்லாத அகதிகளையும் பொலிஸ் நாய் பிடிப்பது போலப் பிடித்துக் கொண்டுபோய் மாத்தறையிலுள்ள பிச்சைக்காரர்கள் விடுதியில் அடைத்துவைத்துள்ளது.

காரணம் என்ன தெரியுமோ? சார்க் மகாநாட்டுக்கு கொழும்பு வரும் பிரதம விருந்தினர்கள் இந்த "அழுக்குகளை" பார்ப்பது சரியில்லை என்பதற்காகவாம்.

மகாநாட்டுக்கு வரும் நேபாளம், பூட்டான், பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், மாலைதீவு நாடுகளின் தலைவர்கள் எவ்வளவு "பரிசுத்தமானவர்கள்" என்று அந்நாட்டு மக்களைக் கேட்டால் நன்றாகவே தெரிந்துகொள்ளலாம் என்பது ஒருபுறமிருக்க,

"பிச்சைக்காரர்களை" அப்புறப்படுத்திவிட்டால் நாட்டைச் சுத்தம் செய்துவிடலாம் என்ற அரசியல் தலைமைகளையும், அவர்களின் கட்சிகளையும் அப்புறப்படுத்த வேண்டிய தேவை எப்போதோ மக்களுக்கு ஏற்பட்டுவிட்டது.

தங்களது சுரண்டல் ஒடுக்குமுறைக்கும், இராணுவ அடக்குமுறைக்குமாக தங்களைப் பலப்படுத்திக் கொள்ள பணக்கார நாடுகளின் கால்களை நக்கி பிச்சையெடுக்கும் இந்த ஆளும் வர்க்கங்கள் தங்களால் வறுமையாக்கப்பட்டு, தெருவுக்கு விரட்டப்பட்ட மக்களை அப்புறப்படுத்துகிறதாம் - நாட்டை அழகுபடுத்த.

திமிர் பிடித்த இந்த "உயர் பிச்சைக்காரர்களை" அப்புறப்படுத்த இவர்களால் பிச்சையெடுக்க வைக்கப்பட்டவர்கள் இணைந்து கொள்ளவேண்டாமோ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துயர் தேங்கும் தேசம் எமது
எரிபுகை மூட்டத்திலூடு
தலையுயர்த்தித் தேடுவேன்,
தென்திசை சகோதரனுக்கு
எம் துயர் சொல்லவென்று.


# எனக்கும், உனக்கும்.

துலங்கவில்லை அவன்.
அங்கும்
புகை மூண்டிருக்கக் கண்டு
சுமையேறும் என் மனது.

புகை முட்டி
மூச்செறிந்த வேளை
நாசி உயரத் தேடும்
நற் காற்றை மெல்லவென்று.

இப்போது
தென்திசைக் காற்றும்
பிணவாடையைச்
சுமந்தல்லவா தருகின்றது.

தெளிந்த மகாவலியின்
கலகலத்த நீரோட்டம் கேட்டு
ஒருகணம் உவகை பெறலாமென
நீட்டும் செவிகளை
ஏமாற்றும் மகாவலியும்.
அவலக் குரலோடு
பிணம் சுமந்தபடியே.



மனம் உடைந்து சொல்வேன்
"புரிந்ததொன்று சகோதரனே!
என் போன்றே
இந் நாளில் உன் வாழ்வும்.
ஒன்று மட்டும் புரியவில்லை.
எம் மீது
தமிழரெனக் குற்றமுண்டு,
உன் மீது
என்ன வைத்தனர்?"

தென்திசைச் சகோதரனே
இப்போதும்
புரியாதது ஒன்று உண்டென்பேன்.
அது, பொதுவில் உண்டென்பேன்!

*

தம்பா

www.tamilarangam.net

# புலிகளே புலிகளுக்கு...?!

1987ஆம் ஆண்டு திலீபன் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளுமுன் ஆற்றிய உரையில் யாழ்ப்பாணத்தில் இருந்த டச்சுக்கோட்டைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்திருந்தார். தமிழீழத்தின் மீதான ஒடுக்குமுறையின் சின்னம் என்று கோட்டையை திலீபன் குறிப்பிட்டிருந்தார். ஆகவே யுத்தத்தின் ஆரம்பத்தில் கோட்டையை கைப்பற்றுவதில் புலிகள் மும்முரமாக இருந்தனர்.

சென்ற ஆண்டு செப்ரெம்பர் மாதம் இலங்கை இராணுவம் கோட்டையை விட்டு வெளியேறியது. உடனே புலிகள் ஒடுக்குமுறையின் சின்னமாக இருந்த புராதனச் சின்னமான யாழ் கோட்டையை இடிக்க ஆரம்பித்தார்கள். கோட்டை புலிகள் வசமானதும் அவர்கள் செய்த காரியம் கோட்டைக்குள்ளிருந்த மிகப் பெரிய தேவாலயத்தைச் சிதைத்ததுதான். அறுபதுகளில் அரசு இந்தத் தேவாலயத்தை யாழ் கிறிஸ்தவ யூனியனிடம் கையளித்திருந்தது.

யாழ் கோட்டையின் சுவர்கள் யாவும் இடிபாடான நிலையில் காணப்படுகிறது. இந்த வருட நடுப்பகுதியில் தமிழ்க் கலாச்சாரத்தைக் கொண்டாடும் முகமாக புலிகள் ஏற்பாடு செய்திருந்த முத்தமிழ் விழாவின் போதுதான் பெரும்பாலான மக்களுக்கு கோட்டையில் மிச்சம் மீதியாக இருந்தவைகளைப் போய்ப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தது.

இப்போதும் பழையபடி அப்படியே பேணிப் பாதுகாக்கப்பட்டிருப்பது கோட்டையில் உள்ள சிறைச்சாலைதான். அதுவும் சிறைக் கைதிகளுடன்!. இதைவிட மேலதிகமாக விருந்த கைதிகளுக்கு தரையிலிருந்து ஒரு அடிக்கு மேல் தகரத் துண்டுகளால் கொட்டில்கள் அமைக்கப்பட்டிருந்தன. கைதிகள் சிறுநீர் கழிப்பதற்கு வட்டத் துளைகளோடு பொருத்தப்பட்ட குழாய்கள் காணப்

www.tamilarangam.net

பட்டன.

பார்வையாளருக்கு என ஒதுக் கப்பட்ட பகுதியில் இருந்து விலகி கைதிக் கூடங்களுக்கு அண்மையாக தற்செயலாக பார்வையாளர் ஒருவர் வந்தபோது அவரின் கவனத்தை ஈர்ப்பதற்காக உள்ளே அடைக்கப்பட்டிருந்த கைதிகள் சத்தமிட்டார்கள். உடனே ஒரு புலிவீரன் ஓடிவந்து அப் பார்வையாளரை அப்பால் விரட்டிவிட்டான். பிறகு கொட்டிலின் தகரத்தில் தட்டி உள்ளேயிருந்த கைதிகளை சத்தம் போட வேண்டாமென்று விரட்டினான்.

ஒவ்வொரு கொட்டிலிலும் 20 பேராவது இருந்திருப்பார்கள். பின்னர் ஒரு விடுதலைப் புலி இது பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது அக் கொட்டில்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் யாவரும் புலிகள் இயக்க உறுப்பினர்களேயென்றும், இயக்கத்தை விட்டு வெளியேற நோட்டீஸ் கொடுத்தவர்களென்றும் கூறினார். இவர்களுக்கு ஒருநாளைக்கு ஒருவேளைச் சாப்பாடுடன் ஒவ்வொரு கல்லாக கோட்டையை ஒரு வருடத்திற்கு உடைப்பதுதான் தண்டனை. மாதத்திற்கு ஒருமுறை அவர்களை உறவினர்கள் பார்வையிடலாம். ஒரு வருடத்தின் பின் வெளியேறலாம்!.

"இப்படிக் கிடந்து சித்திரவதைப்பட்டுச் சாவதைவிட கரும்புலிகளின் தற்கொலைப் படைப்பிரிவில் சேர்ந்திருக்கலாம்" என்று அடைக்கப்பட்டிருந்த ஒரு கைதி பார்வையாளர் ஒருவரிடம் கூறியிருக்கிறார்.

புலிகள் இயக்கத்தில் புலியாக இருந்தவர்களுக்கே இந்த நிலையென்றால் ஏனைய கைதிகளின் நிலை என்னவாயிருக்கும் என நீங்கள் ஊகிக்கலாம்.

யாழ் கோட்டையின் பாதுகாக்கப்படவேண்டிய பகுதிகள் எல்லாம் அப்பிடியே போய்விடும் போலிருக்கும் அதே நேரம் கைதிக் கூடங்கள் அப்படியேதான் இருக்கப் போகின்றன. விடுதலையின் அடையாளம் இதுதானோ?!.

*- மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களின் 8ஆவது அறிக்கையிலிருந்து தமிழாக்கம் செய்தவரும், தலைப்பிட்டவரும்: பாக்கியராசா*

---

## பின்னட்டை அறிவித்தல்:

சேகுவராவின் உரையிலிருந்து.

---

www.tamilarangam.net

இரவு 8.30 மணி. ப்ரான்ஸ் கஃவ்காவின் படைப்புகள் தொடர்பான ஒரு நாடகத்தைப் பார்க்க நாங்கள் மூவர் - நான், நண்பர், நண்பரின் மனைவி - செக்கோ செலவாக்கியாவின் நகரொன்றில் பிரயாணம் செய்துகொண்டிருந்தோம். ட்ராமிலிருந்து இறங்கி சற்றே இருள் படர்ந்த தெருவில் நாங்கள் நடக்கிறோம்.

எதிர் முனையில் 15 பேர் கொண்ட நாஸிகள் வந்து கொண்டிருக்கின்றனர். முற்றாக மழிக்கப்பட்ட தலை; கனத்த பூட்ஸ்கள்; கறுந்தடிகள். அவர்களை இனங்கண்டு சுதாகரிப்பதற்குள் அது நடந்துவிட்டது.

திடீரென எங்களை நோக்கித் துரிதமாய் ஓடிவந்த நாஸிகள் எதிர்பாராதவாறு கண்ணீர்ப் புகையடித்து, எங்களைச் சூழ்ந்து மொய்த்துக்கொண்டு தாக்க ஆரம்பித்தனர். எனது நண்பரின் தலையிலிருந்து இரத்தம் வழிய ஆரம்பித்தது. நண்பரின் மனைவியை ஒரு நாஸி வெறியன் கடுமையாகத் தலையில் தாக்கினான். தாக்கிவிட்டு அவர்கள் ஓடி மறைந்துவிட்டனர்.

அந்த இடத்தில் யாரும் எங்களுக்கு உதவ வரவில்லை. அங்கு நின்ற வியட்நாமியப் பெண்மணி ஒருவர் கூறினார் "ஒரு வாரத்திற்கு முதல் ஒரு சீன டாக்டரும் இதேபோல் இந்த வெறியர்களால் தாக்கப்பட்டார்".

1970களின் பிற்பகுதியில் "இனவெறி இசை அரங்கிலிருந்து" கிளைத்த மொட்டந்தலையர்கள் (Skin Heads) தாம் உருப்பெற்ற இங்கிலாந்திலிருந்து இன்று பிற மேலை நாடுகளிலும் தமது நச்சு வலையை விஸ்தரித்துள்ளார்கள். இந்த "ஸ்கின்ஸ்" இனவெறிக் குண்டர்கள் வெறும் அச்சம் தரும் தோற்றம் கொண்டவர்கள் மட்டுமல்லர். அமெரிக்காவிலும், இங்கி

# கறுப்பர்களை அழிக்கும்வரை...



www.tamilarangam.net

லாந்திலும் நடந்த பல இன-நிற வெறிக் கொலைகளுக்குப் பின்னணியில் இந்த வெறியர்களே இருக்கிறார்கள். அமெரிக்கா, ஐரோப்பா எங்கனும் பயங்கரவாத அச்சுறுத்தல்களைக் கட்டவிழ்த்துவிடுவதில் இவ் வெறியர்களின் பங்கும் முக்கியமானது.

இன-நிற வெறிப் பயங்கரவாதத்திற்கு இன்று செக்கோசெலவாக்கியாவும் விதிவிலக்கல்ல. மற்ற ஐரோப்பிய நாடுகளைப் போலவே இங்கும் இது ஒரு "தேசிய" வெளிப்பாடாகத் தோற்றம் காட்டுகிறது. செக்கோவின் வொஷிமியாவில் "செக்" குடியரசுக் கட்சியோடு இந்த வெறியர்கள் கூட்டுச் சேர்ந்து இயங்குகிறார்கள்.

இவ்வின-நிற வெறியர்களின் "இலட்சியம்" பற்றித் தெரிந்து கொள்வதற்காக செக்கோசெலவாக்கியாவில் புதிதாக வெளிவரும் 'புறொக்னொஸிஸ்' என்ற பத்திரிகையில் வெளிவந்த பேட்டியொன்றைத் தமிழாக்கம் செய்திருக்கிறேன். பிரட்டிப்லாவா நகரின் மதுபானச்சாலையில் ஸ்கின்ஸ் குழுவைச் சேர்ந்த ஒருவனை பத்திரிகையாளர் பேட்டி கண்டுள்ளார்.

*பத் : ஸ்கின்ஸ் என்றால் என்ன? நீங்கள் என்ன செய்கிறீர்கள்?*

ஸ்கி : அந்நிய அடையாளங்கள் எதுவுமில்லாத ஒரு தூய சமுகத்தைக் கட்டியெழுப்பும் இனக் கருத்தோட்டத்தைக் கொண்ட மக்களின் கூட்டுத்தான் ஸ்கின்ஸ். ஒரு கறுப்பனோ, ஒரு அராபியனோ அல்லது ஒரு ஹிப்ஸியோ வெள்ளையரைத் தாக்கினால் அவர்களை எதிர்த்து நாம் பாதுகாப்பு வழங்குகின்றோம். கறுப்பர்களும், ஹிப்ஸிகளும் மற்றும் வெளிநாட்டு நாணயங்களை மாற்றித் திரிகிற சோதாப் பேர்வழிகளும் ஒரு வேலையும் பார்ப்பதில்லை. எனவே நாம் ஒருங்கிணைந்து இதற்கு ஒரு வழி பண்ணியாகவேண்டும்.

*பத் : உங்களுடைய குழு ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட ஸ்தாபனம் போன்றதா? உங்கள் பங்கு என்ன?*

ஸ்கி : இன்னும் இறுக்கமான ஸ்தாபன வடிவத்தைப் பெறவில்லை. நான் மக்களை ஒழுங்குபடுத்தி அவர்களைச் செயற்படத் தூண்டிவருகிறேன்.

*பத் : உங்களுக்கு சர்வதேச இனரீதியான இயக்கங்களுடன் தொடர்புகள் உண்டா?*

ஸ்கி : சில தொடர்புகள் உண்டு தான். கிரேக்க வெள்ளை இனத் தலைவர் ஜோரியஸ் கொரில் எங்களின் ஒரு இலட்சிய நாயகர்.

*பத் : நீங்கள் உங்களை செலவாக்*

www.tamilarangam.net

*கிய தேசியவாதி என்று கருதிக் கொள்கிறீர்களா?*

ஸ்கி : ஆம். சந்தேகமென்ன.

*பத் : உங்களிடம் அதிகாரமும், நிறையப் பணமும் இருக்குமானால் என்ன செய்வீர்கள்?*

ஸ்கி : மனிதர்களைப் போட்டு எரிப்பதற்கான பெரிய கிடங் கொன்றை அமைப்பேன். இதில் சகல யூதர்களையும், கறுப்பர்களை யும், ஜிப்ஸிகளையும் போட்டு எரித் துக் கொல்வேன். வெள்ளையர்கள் தான் உலகை ஆள வேண்டும்.

*பத் : நாஸிகளின் கருத்துகளுடன் உங்களுக்கு உடன்பாடு உண்டா?*

ஸ்கி : சில கருத்துகளுடன் உடன் படுகிறோம். ஆரிய இனம் மட் டுமே உலகில் வாழவேண்டும் என்ற கருத்துடன் உடன்பாடில்லை. நாகரிகமான தேசங்கள் மட்டுமே உலகில் வாழத் தகுதியுடையவை, மற்றவை அழிந்துபோக வேண் டும் என்ற கருத்துடன் உடன்படுகி றோம்.

*பத் : உங்களின் இலட்சிய நாயகர் கள் வேறு யார்?*

ஸ்கி : நல்லதொரு நாய். ஒரு திறமான குத்துச்சண்டைக்காரனை விட நல்ல நாய் திறம்படப் பணி யாற்றும். இதைவிட செலவாக்கியா வின் முதலும் கடைசியுமான ஜனா திபதி ரிஸோ.

*பத் : இந்த நகரில் எத்தனை ஸ்கின்ஸ் இருக்கிறார்கள்?*

ஸ்கி : 40 அதி தீவிரவாதிகளும், 300 சாதாரணமானவர்களும், 10000 ஆதரவாளர்களும் இருக்கி றார்கள்.

*பத் : நீங்கள் எவ்வளவு காலத்தி ற்கு ஸ்கின்ஸ் ஆக இருப்பீர்கள்?*

ஸ்கி : இந்த உலகத்தில் கறுப்பர் கள் இருக்கும்வரை நாங்களும் ஸ்கின்ஸ் ஆக இருப்போம். இந்த கறுத்த முடர்களுடன் பேசிப் பயனி ல்லை. அதனால் இவர்களை அழிக் கும்வரை நான் ஸ்கின்ஸ் ஆகவே இருப்பேன்.

*பத் : பொலிஸ் பற்றிய உங்கள் அணுகுமுறை என்ன?*

ஸ்கி : இது முட்டாள்த்தனமான கேள்வி. எங்களைப் பற்றிப் பொலிஸ் என்ன நினைக்கிறது என்று கேள்.

*பத் : சரி, பொலிஸ் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறது?*

ஸ்கி : சில நேரங்களில் அவர்கள் எங்களை அனுசரிக்கிறார்கள். சில

www.tamilarangam.net

சமயங்களில் எங்களுக்கு கெடுபிடிகள் தருகிறார்கள். பொலிஸின் பணியைத்தான் நாங்கள் செய்கிறோம் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

*பத் : எத்தனை வயதிலிருந்து ஸ்கின்ஸ் ஆக இருக்கிறீர்கள்?*

ஸ்கி : 12 வயதிலிருந்து. நாங்கள் தெருவில்தான் வளர்ந்தோம். அடியும், சண்டையும்தான் எங்கள் தினசரி வாழ்க்கை. எங்கள் பெற்றோர் எங்களை ஒன்றும் செய்துவிட முடியாது.

வெள்ளையரல்லாதோரைக் கொன்றொழிக்கும் போக்குடைய குழுக்கள் வளர்ந்து வருவது இன்று அனைவருக்குமே அச்சுறுத்தலாயுள்ளது என்பதில் ஐயமில்லை. இதைக் கவனத்தில்கொண்டு பாஸிஸ எதிர்ப்பு அமைப்புகள் பலமாக்கப்படுவது அவசியமானதாகும்.

* மு.நித்தியானந்தன் *

---

அட்டைப்படம்:
சௌந்தர்

---

# பிழைகள்
## பிழைகள்
### பிழைகள்

கலம் 46இல் பிரசுரமான "வாசகர் கடிதங்கள்"இல் இடம் பெற்றுவிட்ட சொல் / வசனப் பிழைகளின் திருத்தம்.

பிழை: "வர்க்க மதிப்பீடுகள் அவசியம்தான். ஆனால் மானிட மதிப்பீடுகள் அதைவிட உயர்ந்தவையாகும்". – சுகனின் கடிதம்

சரி : "வர்க்க மதிப்பீடுகள் அவசியம்தான். ஆனால் மானிட மதிப்புகள் அதைவிட உயர்ந்தவையாகும்."

-•-

பிழை: இங்கு கொலைகாரர்களைப் பாதிப்படையச் செய்து ஒடுக்குமுறைச் சூழலை இல்லாதொழிக்கிற சூழலில் தவிர்க்க முடியாமல் ஒடுக்குபவர்களை – கொலைகாரர்களை பாதிப்படையச் செய்கிறதா? – ப.வி.ஸ்ரீரங்கனின் கடிதம்

சரி : இங்கு கொலைகாரர்களைப் பாதிப்படையச் செய்து, ஒடுக்குமுறைச் சூழலை இல்லாதொழிப்பதா அல்லது ஒடுக்குமுறைச்சூழலை இல்லாதொழிக்கிற சூழலில் தவிர்க்க முடியாமல் ஒடுக்குபவர்களை – கொலைகாரர்களை பாதிப்படையச் செய்கிறதா?


oooooooooooooooooooooooooooooooo



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒப்பிறேசன் வலம்புரி ஆரம்பித்து இருவாரத்துள் தீவுப்பகுதி முழுவதும், சங்குப்பிட்டியும் அரசு பட்டாளத்தின் பிடிக்குள் வந்துவிட்டது. சங்குப்பிட்டியில் பட்டாளம் முகாமிட்டதுடன் யாழ்குடாநாட்டுக்குப் போக இருந்த ஒரே வழியும் அடைபட்டுவிட்டது. புலிகளிடம் பாஸ் வாங்கிக்கொண்டு கேரதீவு-சங்குப்பிட்டி-பூநகரி வழியாக வந்து கொண்டிருந்த பயணிகளது பயணமும், புலிகளின் முக்கியமானதொரு பணவருவாய்க்கான போக்குவரத்துத் தொழிலும் பட்டுவிட்டது ஒரு புறமிருக்க. இந்தத் தாக்குதலிலும், கைப்பற்றலிலும் புலிகளிடமிருந்து எதிர்பார்த்ததைவிட குறைந்தளவு எதிர்த் தாக்குதலையே பட்டாளம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்ற செய்தி எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. தீவுப்பகுதியில் தாக்குதல் இல்லாமல் இருந்தாலும், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததெனச் சொல்லக்கூடிய சங்குப்பிட்டியில் இராணுவம் முகாமமைக்க புலிகள் அனுமதித்தது எனக்கு வியப்பளித்தது. சங்குப்பிட்டி, ஆனையிறவு, சுண்டிக்குளம் என்று 3 இடங்களிலும் முகாமமைத்துள்ள இராணுவத்தைப் பொறுத்தவரை குடாநாட்டைப் பட்டினி போட்டுச் சாகடிக்கவும், அதன் மூலம் புலிகளைப் பலவீனப்படுத்தவும் அதற்கு இது வசதியாகியுள்ளது. சங்குப்பிட்டியை இராணுவம் கைப்பற்றியதும் இராணுவத்தின் சார்பில் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிக்கை ஒன்றில் "யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கம் எமக்கு இல்லை. புலிகளைப் பலவீனப்படுத்துவதே எமது நோக்கம்" என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பலவீனப்படுத்தும் நோக்கம் சாத்தியமாகும் வாய்ப்பு யாழ்ப்பாணத்திற்கான 3 பாதைகளும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்திருப்பதால் உருவாகியுள்ளது. ஏற்கெனவே எல்லாப் பாவனைப்பொருட்களும் ஆனை விலை, குதிரைவிலை விற்கிற போது இந்தத் தடையும் ஏற்பட்



www.tamilarangam.net

டால் என்ன நடக்குமோ தெரியாது என்ற அச்சம் பரவலாக எல்லோ ராலும் உணரப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பாகவும், நடந்து முடிந்த ஒழுக்கவழுவுரை பிரே ரணை தொடர்பாகவும் பேசலாமென நினைத்துக்கொண்டு நான் எமது நண்பரைச் சந்திக்கப் போனேன்.

கையிலே ஒரு பத்திரிகையை வைத்துக்கொண்டு, அதன் ஒரு கட்டுரையில் பென்சிலால் ஏதோ குறிகள் போட்டபடி, நான் போன தைக்கூடக் கவனிக்காமல் உட்கார் ந்திருந்தார் நண்பர்.

"அது என்ன பத்திரிகை அவ்வ ளவு தீவிரமாக...?" என்று கேட்டு அவரது சிந்தனையில் குறுக்கிட் டேன் நான்.

"அட.. நீயா.. வா" என்று கூறி 'சமர்' பத்திரிகையை என்னிடம் நீட்டினார் நண்பர்.

பத்திரிகையை வாங்கிப் புரட்டி யபடி எதிராக இருந்த கதிரையில் உட்கார்ந்தேன் நான். பத்திரிகை பிரான்ஸிலிருந்து வரும் 'சமர்'இன் இரண்டாவது இதழ்.

"நேற்றுத்தான் வந்தது. இதைப் படித்ததும் உன்னோடு தொடர்பு கொள்ளவேண்டுமென்று நினைத் தேன். நீயே வந்துவிட்டாய்" என் றார் நண்பர்.

"ஏன்? அப்படி என்ன விசேஷ மாக இருக்கிறது?" என்றேன் நான்.

"சமர் தொடர்பாக நீ எழுதிய கருத்துகள் பற்றி இதில் ஒரு கட் டுரை வந்திருக்கு. அதுதான்..."

"அப்பிடியா? பாப்பம். ஆனால் அதுக்கு முதல் நான் கேக்க வந்த பிரச்சினையைப் பற்றி உன்ரை கருத்தைச் சொல்லு"

"என்ன அது? எம்.எச்.முஹம் மத் 20 இலட்சம் ரூபா இலஞ்சம் வாங்கினதும், மகன் ஹூசேன் முஹம்மத்துக்கு 'அம்பாஸிடர்' போஸ்ட் கிடைச்சதும்தான் அவ ற்றை குத்துக்கரணத்திற்குக் கார ணம் என்டது உண்மையா என்டு கேக்கப் போறாய் அதுதானே?"

"அதுவும் ஒன்டுதான். லஞ்சம் வாங்கிறது எம்.பி.மாருக்கு புது விசயமில்லையே. ஆனால் இந்தப் பிரச்சினை எங்கைபோய் முடியப் போகிறது என்டதுதான்... மற்றது, சங்குப்பிட்டியை இராணுவம் கைப் பற்றினது என்ன விளைவை ஏற்படு த்தப் போகுதென்டது..."

"சங்குப்பிட்டியை எங்கை இரா ணுவம் கைப்பற்றினது?" என்றார் நண்பர் இடைமறித்து.

"ஏன் அரசாங்கத்தின்ரை நியூஸ் அப்ப பொய்யோ?"

www.tamilarangam.net

"அதொண்டும் பொய்யில்லை. ஆனால் அது கைப்பற்றல் இல்லை. அது ஏற்கெனவே புலிகளின்ரை பிடியிலை இருந்தால் எல்லோ கைப்பற்றல் எண்டு சொல்லேலும்"

"நீ என்ன சொல்லுறாய்?"

"சங்குப்பிட்டி புலிகளின்ரை பாதுகாப்புக்குள்ளோ, கட்டுப்பாட்டுக்குள்ளோ இருந்ததெண்டு சொல்ல முடியாது. அதாலை போற வாற சனத்தைப் புலியள் 'செக்' பண்ணினதென்னவோ உண்மையெண்டாலும் அது புலியளாலை பாதுகாக்கப்படுற ஒரு இடமாய் ஒருகாலமும் இருக்கேல்லை. அந்தமாதிரி கேந்திர நிலையங்களை பாதுகாக்கிற திட்டங்கள் ஒருநாளும் புலியளுக்கு இருந்ததில்லை. புலியள் நடாத்திறது முகாமைவிட்டு இராணுவம் வெளியால வாறதை தடுக்கிற தடுப்பு யுத்தம் எண்டு சொல்லுறதுக்கு இதைவிட வேறை உதாரணம் தேவையில்லை. இராணுவமுகாம்களைச் சுற்றிக் காவல் காப்பது மட்டுந்தான் புலிக்கு முக்கியம். மற்றப்படி இராணுவத்தின் யுத்த தந்திரம் எப்படிப் போகும் என்று ஊகிப்பதோ அதன்படி தமது திட்டத்தை வகுப்பதோ புலிகளின் பண்பு இல்லை!. ஏற்கெனவே வெற்றிலைக்கேணியாலை இராணுவம் வருமெண்டு புலியள் எதிர்பார்க்கவில்லை எண்டு பிரபாகரனே தெரிவித்திருந்தது உனக்கு ஞாபகமிருக்கிறதுதானே..."

"சரி. விடு. ஆனால் இப்ப என்ன நடக்கப்போகுதெண்டு சொல்லு. புலியளுக்கு இனிப் போக்குவரத்துப் பிரச்சினையள் எல்லாம் பெரிய பிரச்சினையாகப் போகுதுதானே. இது குடாநாட்டுக்குள் உள்ள புலியளை நெருக்கடிக்குள்ளாக்கப் போகுது. இதைப் பற்றி என்ன சொல்லப் போறாய்.?"

"புலியளை இல்லை. சனங்களை எண்டு சொல்லு. உண்மையிலை இதாலை பெருமளவிலை பாதிக்கப் படப் போறது எப்பவும் போல பொதுமக்கள்தான். அழுக்கிறது அவங்கள். விழுகிறது சனம்தானே. புலியளுக்கு வாறது போறதொண்டும் பிரச்சினையாய் இராது."

"நான் நினைக்கிறேன் சனங்களுக்கு தான் பிரச்சினையாய் இராதெண்டு. இராணுவம் ஆனையிறவூடாகப் போக்குவரத்தை அனுமதிக்கப் போவதாக சொல்லியிருக்குது தானே?"

"இராணுவம் சொல்லியிருக்குதான். ஆனால் புலியள் அதுக்கு அனுமதிப்பாங்களோ தெரியாது. ஏற்கெனவே செஞ்சிலுவைச் சங்கம் புலியளை இதுபற்றிக் கேட்கப் புலியள் இதுக்கு மறுத்துவிட்டதாக தெரியவருகிறது. ஆனையிறவூடாக மக்கள் போனால் மக்களுடன் இரா

www.tamilarangam.net

னுவமும் கூட நகரமுற்பட்டாலும் என்ற காரணத்தைக் காட்டி புலியள் இதை மறுக்கலாம். எனவே மக்க ளுக்கு இந்தப் பாதை பாவிக்கப் பயன்படுமா என்பது சந் தேகமே. ஒருகால் அப்படி அனுமதித்தாலும் குடாநாட்டுக்குள் போகப் போகிற பொருட்களை இராணுவமே கட்டுப் படுத்தப்போவதால் – ஏற்கெனவே வவுனியாவில் இதைச் செய்கிறது – நிலைமை இப்படியே நீடிக்கும். கஷ்டப்போறது மக்கள் மட்டுந் தான். புலியள் இராணுவத்தின்ரை கண்ணிலை மண்ணைத் தூவிவிட்டு வேறுவழிகளால் நகரலாம். அவர் கள் சுண்டிக்குளம் முதல் சங்குப்பிட் டிவரை குடாநாட்டின் கழுத்தில் மாலை போட்டதுபோல் வரிசையாக இந்தியப்படையை நிறுத்தி வைத்தி ருந்தபோதும் போய் வந்தவங்கள் தானே. அவங்களுக்கிருக்கிற வசதி சனங்களுக்கு இல்லையே. கஷ்டப் படப் போறது சனம்தான்."

"அப்ப ஏன் இராணுவம் யாழ்ப் பாணத்தைப் பிடிக்கிறது தன்ரை நோக்கமில்லை என்டு அறிவிச்சி ருக்குது?"

"அது வெறும் கதை. அப்பிடிப் பிடிக்கிறது அரசுக்கு அவ்வளவு இலேசான காரியமில்லை. அதோ டை பிடிச்சு தக்க வைச்சுக் கொள் ளுறதும் அவ்வளவு சாத்தியம் இல் லை. உண்மையிலை இராணுவம் யாழ்ப்பாணத்திலை முன்னேறி அதைப் பிடிக்கிறதென்டால் குறை ஞ்சது ஒரு 25, 30 ஆயிரம் பேரை களத்திலை இறக்க வேணும். இதுக்கு மேலாலை பொதுமக்க ளைப் பலியெடுக்க வேணும். இரண் டாவதான பொதுமக்களைக் கொல் லுறதுக்கு அரசு எப்பவும் தயார். அதைச் செய்துகொண்டும் வருகுது. முதலாவதுக்குத்தான் அதுக்கு சக்தி போதாது. ஆனாலும் அதை நோக் கிய தயாரிப்பில் அரசு ஈடுபட்டு வருகிறது. இராணுவத்திற்கு தொட ர்ந்து ஆட்களைச் சேர்த்து வருகி றது. வெளிநாடுகளிடம் பண, ஆயுத உதவிகேட்டு வருகிறது. இவ்வுதவி கிடைத்தும் வருகிறது. எனினும் தற்போதைக்குப் பலவீனப்படுத்து வதே போதும் என்பது அதற்கு மேல் இப்போது சாத்தியமில்லை என்டதாலைதான்."

"அப்ப குடாநாட்டுக்கான போக் குவரத்து..?"

"ஒன்டில் சங்குப்பிட்டியா லையோ அல்லது ஆனையிறவா லையோ சனம் போறதுக்கு புலியள் ஒத்துக்கொள்ள வேண்டிவரத்தான் போகுது. சங்குப்பிட்டி, ஆனையி றவு இரண்டு முகாம்களையும் சுற்றி வளைச்சு ஒருசில சென்றிகளை ஒழு ங்குபடுத்திவிட்டுப் புலிகள் அதற்கு உடன்படக்கூடும்."

"கடைசியாய் புலியள் எல்லாத் தையும் குடுத்திட்டு குடாநாட்டுக்கை

www.tamilarangam.net




வந்திட்டாங்கள். 1987லிலை வடமாராட்சி ஒப்பிரேசன் லிபறேசன் காலத்திலை இருந்ததைப்போல வந்திட்டிது"

"அடுத்ததா வடமாராட்சியையும் துண்டிக்க அரசபடைகள் முயலும். வடமாராட்சியைத் துண்டிச்சால் கண்டாவளைப் பாதையிலும் கனிசமானளவு கட்டுப்பாட்டைக் கொண்டு வந்திடுவாங்கள். ஆனால் அது எக்கச்சக்கமான இராணுவபலத்தோடை சாத்தியம். ஆனால் எப்பிடியோ புலியளை இந்த அரசாலை முற்றாக அழிக்க முடியாது. அது நாங்கள் முதல் சொன்னதுபோலை திரும்பவும் முதல்லை இருந்து தொடங்கும். இந்த அரசு மக்களின்ரை பிரச்சினையை ஒருநாளும் தீர்க்காது என்டது வடிவாய்த் தெரிஞ்ச விஷயம். என்ரை சிங்கள நண்பர் சொன்னதுபோல, இலங்கை அரசாங்கம் ஏதாவது செய்யிறதெண்டால் அரசுக்கு ஏதாவது அழுத்தம் கொடுக்கப்படவேணும். இந்தியாவின்ரை நெருக்குதலாலைதான் இந்திய இலங்கை ஒப்பந்தமாவது வந்திது - அது இரண்டு அரசின்ரை நலன்களையே கொண்டது என்டாலும்!. புலியளின்ரை நெருக்குதல் ஒழுங்காய் இருந்தால் ஏதாவது நடக்கும். ஆனால் அதுவும் சரியில்லையெண்டால்... அரசு மீதான புதிய நெருக்குதல்கள் எப்பிடியாவது உருவாகிவரவேணும். அதுவரை இஞ்சை ஒண்டும் நடக்காது. உனக்கு ஒழுக்கவழுவுரைப் பிரச்சினையிலை என்ன கேக்க இருக்குதெண்டு சொல்லுறாய்?" என்று கேட்டார் நண்பர்.

எனக்கு எதுவும் பேச வரவில்லை. ஏன் இப்பிடி அவசரப்படுகிறார் நண்பர் என்று மட்டும் தோன்

www.tamilarangam.net

றியது. தற்போது தொடங்கியிருக்கிற ஒப்பிரேசன் வலம்புரி பிரச்சிலை அவரை அவ்வளவாகப் பாதிக்கவில்லையோ என்று தோன்றிற்று. 'நித்தம் சாவாருக்கு அழுவார் இல்லை' எண்டது போல வரவர கன பேருக்கு எங்கடை பிரச்சினை ஒண்டும் அக்கறைக்குரிய பிரச்சினை இல்லையெண்டாகிப் போகுதோ எண்டு தோன்றிற்று.

"என்ன யோசிக்கிறாய்?" என்று இடைமறித்தார் அவர்.

" இல்லை. நீ கொஞ்சம் அக்கறையில்லாமல் அவசரப்படுகிறாய் போலை பட்டுது. அதுதான்.."

"அக்கறை எண்டால் என்ன? யாழ்ப்பாணச் சனத்தின்ரை கஷ்டத்தையும், புலியளின்ரை செயல்களைப் பற்றியும் கதைச்சுக்கொண்டிருக்கிறது மட்டுந்தானா? கவலைப்படுவதையும், அழுவதையும் விட பிரச்சினையை விளங்கிக்கொள்ளுவதையும், அதை மாற்றுவதைப் பற்றியும் அக்கறைப்படுவது முக்கியமானது என்டு நினைக்கிறன். எம்.எச்.முஹம்மத் இலஞ்சம் வாங்கினதையும், அத்துலத்தும், காமினியும் பிரேமதாசாவுடன் நடாத்துகிற பம்மாத்துச் சண்டையையும் பற்றி அதிகமாக அலட்டிக்கொள்ளுறதிலை பெரிய பிரயோசனமில்லை. அது ஒன்றும் ஜனனாயகத்திற்கான போராட்டமும் இல்லை, பாராளுமன்றத்திலை ஜனனாயகம் வாழுவுமில்லை. மக்களை ஏமாற்றி அவர்களின்ரை பேராலை ஆளும் வர்க்கங்கள் அவர்களையே சுரண்டுவதற்கு முடுதிரை போடப் பயன்படுகிற அரட்டை மடம்தான் பாராளுமன்றம். அங்கை இருக்கிறதுகள் சனனாயகத்தைக் காக்கவல்ல, அதை விலை பேசவே இருக்குதுகள். தொந்தி நிரப்புற பணமுதலைகளுக்குச் சேவகம் செய்கிற இந்தப் பிழைப்புவாதப் பன்றிகளைப் பற்றிப் பேச என்ன இருக்கிறது? பிரேமதாசா இவ்வளவு காலத்திற்குப் பிறகு இப்போது தனக்குத் திடீரென்று யாழ் நூலகம் மீது காதல் வந்துவிட்டதைப் போலப் பேசுகிறான். அது மிகவும் பெறுமதி வாய்ந்ததாம். அது ஒரு சர்வதேச நூல் நிலையமாம். அதைக் காமினி எரித்துவிட்டானாம். பதிலுக்கு 1983 இல் தமிழ்-சிங்களக் கலவரத்தை நடாத்தியதே பிரேமதாசாதான் என்று காமினி கோஷ்டியினர் கத்துகிறார்கள். இவர்களுக்கு நல்லதுக்கும் சரி, கெட்டதுக்கும் சரி தமிழ் மக்கள்தான் வந்து வாய்த்தார்கள். முழு நாட்டையுமே அந்நிய ஏகாதிபத்தியங்களுக்கும், உலக வங்கிக்கும் அடகு வைத்தும், நாட்டில் மனித உரிமைவாதிகள், சனனாயகவாதிகள், மாற்று அரசியல் கருத்துள்ளோர் என்று அனைவரையும் கொன்றுபோட்டு, சனனாயகத்தைக் காப்பதாக பம்மாத்துப் பண்ணும் இவர்களைப் பற்றிப் பேச என்ன

www.tamilarangam.net

இருக்கிறது? உனக்குக் கொழும்புப் பத்திரிகைகள் போல லலித் குழுவினர் ஆட்சிக்கு வருவார்களா? சிறிமாவோ கட்சியை விட்டு விலகியதிற்கு யார் காரணம்? என்பன போன்ற குசுகுசுக்களைப் பேசுவதில் தான் அக்கறையா என்ன?" என்று சீறினார் நண்பர்.

எனக்கு ஒருமாதிரிப் போய்விட்டது. உண்மையில் நண்பர் சொன்னதைப்போல குசுகுசுவுக்காக நான் கேட்கவில்லை. பாராளுமன்ற சனநாயகத்தை மீளக்கொண்டுவரப் போவதாக சூழுரைத்துக்கொண்டு போராடக் கிளம்பியுள்ளவர்கள் மக்களிடையே நிலவுகிற சனநாயக விருப்பத்தை தமது நோக்கத்திற்கு சாதகமாகப் பயன்படுத்தவே அப்படிச் செய்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்கள் பிரேமதாசாவைத் தாக்குவதில் காட்டும் அக்கறையை சனாதிபதியைத் தாக்குவதில் காட்டவில்லை. சீரழிந்து போன எஸ்.எல்.எவ்.பியிலுள் உள்ள சிறிமா, அனுரா கோஷ்டியினர் மத்தியிலான முரண்பாடு யூ.என்.பி.யை கேட்பாரற்ற சண்டப்பிரசண்டமாக்கியுள்ளது. லலித்-காமினி கோஸ்டி யூ.என்.பி.க்கு ஒரு மாற்றாக வளருமா என்பதே எனது கேள்வியாக இருந்தது. அப்படி வளருமானால் அது சுதந்திரக்கட்சியையும் தூக்கி விழுங்கிவிட்டு வருமா? அப்படி வருமானாலும் சரி, வராவிட்டாலும் சரி தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் இவர்கள் ஏதோ ஒருவகையில் பாதிப்பை ஏற்படுத்தும் சக்திகளாக இருப்பார்களா என்று யோசிப்பது எனக்கு அவசியம் போலப்பட்டது. ஏனென்றால் லலித்-காமினி கோஸ்டியினர் இந்த இடைக்காலத்தில் மிகத் தெளிவாகத் தமது இனவாத நிலைப்பாட்டை வெளிக்காட்டியிருந்தார்கள். 'வடக்கிலே பிரபாகரன், தெற்கிலே பாஸ்கரலிங்கம்' என்றும், புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதன் மூலம் வீர சிங்களப் படையினர் கொல்லப்படுவதற்குப் பிரேமதாசாவே காரணமாக இருந்தார் என்றும் அவர்கள் பேசுகையில் வெளிப்படையாகத் தெரிவது பச்சை இனவாதமே. பிரேமதாசாவைவிட அதிகளவில் சிங்கள மக்கள் மீது அக்கறை கொண்டவர்கள் தாமே என்று காட்ட இனவாதத்தைக் கக்குவது அவர்களுக்கு அவசியமாக இருக்கிறது. அதனால்தான் நான் அவர்கள் பற்றி அக்கறைப்பட்டேன்.

"என்ன பேசாமல் இருக்கிறாய்? லலித் காமினி கோஸ்டியுடன் முஹம்மத் சேர்ந்திருந்ததும், பிரேரணையில் முதலாளாக சபாநாயகரே கையெழுத்திட்டிருந்ததும் உண்மைதான். ஆனால் பிரேமதாசா அரசைத் தூக்கி நிறுத்துவதால் லாபமடைகிற ஆளும் வர்க்கங்கள் அவரை விலைக்கு வாங்கிவிட்டன. பாராளுமன்றத்திலுள்ளவர்கள் மக்களின் பிரதிநிதிகள் அல்ல. மக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளின் பிரதிநிதிகள் போல் நடிக்கும் ஆளும் வர்க்க ஏஜெண்டுகளே என்பதும் பாராளுமன்றம் ஒன்றும் சனநாயகத்தின் காவலன் அல்ல என்பதும் இதன் மூலம் மீண்டும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. மக்களுக்குத் தாம் விரும்பியவரைத் தெரிவுசெய்யவும், விரும்பாதபோது அவரைத் திருப்பியழைக்கவும், அவர்களையும், அவர்களது நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தவும் அதிகாரமற்ற பாராளுமன்றம் உண்மையில் மக்களது அல்ல. அது மக்களை ஏமாற்றும் மன்றம் தான். இதன் மூலம் ஏதோ சனநாயகம் நிலைநாட்டப் படப் போவதாக கனவுகண்டவர்கள் இதைப் புரிந்துகொள்வார்கள். நாம் அதைப் பற்றிப் பேசுவதில் அக்கறை காட்டவேண்டியதில்லை. அதை அம்பலப்படுத்த வேணுமென்டாலும் அதை விடவும் முக்கியமான விஷயங்கள் இருக்கின்றன. உதாரணமாக உந்தச் சமர் கட்டுரையைப் படித்துப் பார்"

சமர் கட்டுரையைப் படிக்கத் தொடங்கினேன். நண்பர் எழுந்து உள்ளே போய்விட்டு இன்னொரு சமர் உடன் திரும்பி வந்தார்.

சமர் இன் கட்டுரை பற்றி நண்பருடன் கதைத்த விடயங்களை அடுத்த கலத்தில் எழுதுகிறேன்.

oooooooooooooooooooooooooooooooooo



www.tamilarangam.net

தற்கொலை செய்துகொண்ட கவிஞரும், பெண்ணிலைவாதியுமான சிவரமணியின் கவிதைகளில் ஒன்று. "சரி நிகர்"இலிருந்து நன்றியுடன் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.



யுத்த கால
இரவொன்றின் நெருக்குதல்
எங்கள் குழந்தைகளை
வளர்ந்தவர்களாக்கிவிடும்.
ஒரு சிறிய குருவியினுடையதைப் போன்ற
அவர்களின் அழகிய காலையின்
பாதைகளின் குறுக்காய்
வீசப்படும் ஒவ்வொரு குருதிதோய்ந்த
முகமற்ற மனித உடலும்
உயிர்நிறைந்த
அவர்களின் சிரிப்பின் மீதாய்
உடைந்து விழும் மதிற்சுவர்களும்
காரணமாய்,
எங்களுடைய சிறுவர்கள்
சிறுவர்களாயில்லாது போயினர்.

நட்சத்திரம் நிறைந்த இரவில்
அதன் அமைதியை உடைத்து வெடித்த
ஒரு தனித் துப்பாக்கிச் சன்னத்தின் ஓசை
எல்லாக்குழந்தைக் கதைகளினதும் அர்த்தத்தை
இல்லா தொழித்தது.

எஞ்சிய சிறிய பகலிலோ
ஊமங் கொட்டையில் தேர் செய்வதையும்
கிளித்தட்டு மறிப்பதையும்
அவர்கள் மறந்துபோனார்கள்.
அதன் பின்னர்
படலையை நேரத்துடன் சாத்திக் கொள்ளவும்
நாயின் வித்தியாசமான குரைப்பை இனம் காணவும்
கேள்விகேட்காதிருக்கவும்
கேட்ட கேள்விக்கு விடை இல்லாதபோது
மௌனமாயிருக்கவும்,
மந்தைகள்போல எல்லாவற்றையும்
பழகிக்கொண்டனர்.

தும்பியின் இறக்கையைப் பிய்த்து எறிவதும்
தடியையும் பொல்லையும் துப்பாக்கியாக்கி
எதிரியாய் நினைத்து நண்பனைக் கொல்வதும்
எமது சிறுவரின் விளையாட்டானது.

யுத்தகால இரவுகளின் நெருக்குதலில்
எங்கள் குழந்தைகள்
"வளர்ந்தவர்" ஆயினர்.

www.tamilarangam.net

# சர்வதேச நாணய நிதியமும், பொருளாதார அரசியலும் !




" வெளிநாட்டு உதவி" வளர்ந்து வரும் மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தவரை முக்கிய விடய மாகும். பொருளாதார ஓட்டைகளை அடைப்பதற்கு இது முக்கியமான தாயுள்ளது. ஆனால் இவ்வுதவி ஒரு பொழுதும் இலவசமாகக் கிடைப்ப தில்லை.

ஒருவரிடம் நாங்கள் பணம் பெற்றால் எமக்குப் பணம் தந்தவர் எம்மிடம் ஏதாவது எதிர்பார்ப்பது வழமையாகவுள்ளது. வட்டி, வட்டிக்கு வட்டி, ஈடு அல்லது எங்களிட முள்ள பெறுமதி வாய்ந்த பொருள் என்று இது எதுவாகவுமிருக் கலாம். இதோடு நன்றியும் சேரும்!.

1977ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப் பகுதிகளில் இலங்கைக்கு வருடாந்த " வெளிநாட்டு உதவி" $100 மில்லியன்களாக இருந்தது.

1977ஆம் ஆண்டின் பின்னர் இது $500 மில்லியன்களாக அதிகரித்தது.

1990ஆம் ஆண்டில் இது $1 பில்லியனாக உச்சக்கட்டத்தை யடைந்தது.

1991ஆம் ஆண்டில் இலங்கை ஆகக் குறைந்தது $850 மில்லியன்களை வெளிநாட்டு உதவியாக எதிர்பார்க்கிறது.

"உதவி" வழங்கும் நாடுகள் இலங்கையை நல்லதொரு முதலீட்டுச் சந்தையாக கருதுகின்றன. இலங்கையிலிருந்து அவை பெற்றுக்கொள்ளும் பயன்களில் சில:

1). குறைந்த விலையில் வளங்கள்.
2). மூலப் பொருட்கள்
3). குறைந்த உற்பத்திச் செலவு
4). குறைந்த கூலியில் தொழிலாளர்கள் (ஆங்கிலம் தெரிந்தவர்கள் உட்பட!).
5). குறைந்த போக்குவரத்துச்

www.tamilarangam.net

செலவு

சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி என்பனவற்றின் கொள்கைகள் விஞ்ஞானபூர்வமானவை. அதாவது திறந்த பொருளாதாரச் சந்தை முறையாகும். மேலும் கூறின் இவற்றின் கொள்கை ஓர் பொருளாதார அரசியற் கொள்கையே.

ச.நா.நி., உ.வ. என்பன தாம் நிதி வழங்க விரும்பும் அரசிற்கு சில "கொள்கைத்" திட்டங்களை முன்வைக்கின்றன. இக் கொள்கைத் திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பின் மாத்திரமே அவ்வரசுக்கு "உதவி" கிட்டும்.

உதவி பெறும் நாடுகளின் வருடாந்த வரவு-செலவு அறிக்கை இத் திட்டங்களை மையமாக வைத்தே தயாரிக்கப்படும் என்ற கேவலமான விடயம் ஒருபுறமிருக்க, ச.நா.நி., உ.வ. என்பன விதிக்கும் நிபந்தனைகள் கொடூரமானவை. அவற்றில் சில:

1). பொதுச் செலவைக் குறைத்தல். (இலங்கையில் 1988இல் 15%ஆக இருந்த பொதுச் செலவு 1991இல் 8%ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.)

2). பணத்தின் பெறுமதியைக் குறைத்தல்.

3). அரசாங்கத்திடமிருந்து நிதியைப் பெறும் திட்டங்களிலிருந்து தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தல். இத் திட்டங்களுக்கான நிதியைக் குறைத்தல். (புகையிரதக் கூட்டுத்தாபனம், இ.போ.ச, மட்பாண்டக் கூட்டுத்தாபனம், பெல்வத்த சீனித் தொழிற்சாலை என்பனவற்றில் கை வைக்கப்பட்டுள்ளது.)

4). தேசிய உணவு முத்திரைத் திட்டத்தின் கீழ் வரும் குடும்பங்களின் எண்ணிக்கையைக் குறைத்தல். (1.9 மில்லியன் குடும்பங்களிலிருந்து 300,000 குடும்பங்களாகக் குறைக்கப்பட்டுள்ளன).

5). நுகர்வோருக்கான படிகளையும், உற்பத்திப் பொருட்களுக்கான படிகளையும் குறைத்தல்.

6). வரி விகிதங்களை அதிகரித்தல்.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைப் பிரதிநிதியான Harry Snock என்பவன் கூறுவதைக் கேளுங்கள்:

"அளவுக்கதிகமான தொழிலாளர், பொருட்களின் விலை தாழ்வாக இருத்தல், இதன்பொருட்டு பெருமளவு அரச நிதியைப் பாவித்தல், கூடுதலான பணவீக்கம், இலாபமற்ற அரச கூட்டுத்தாபனங்கள், அளவுக்கதிகமாக பணம் பிரதி பண்ணுதல், சுறுசுறுப்பற்ற ஏற்றுமதி

www.tamilarangam.net

என்பனவே இலங்கையின் தொடர்ச்சியான வறுமைக்குக் காரணம்..!"

வறுமை நிலை என்று இவர்கள் கவலைப்படுவது அரசுகளின் "வறுமை"யைத்தான். தாங்கள் கொள்ளையடிப்பதற்குப் பொதுமானதாக இல்லை என்பதைத்தான்.

தனக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளை இலங்கை அரசு எப்படிப் பாவிக்கிறது என்பது நாடறிந்த ரகசியமே.

1). ஆடம்பரப் பொருட்களை இறக்குமதி செய்தல்.

2). உள்நாட்டுப் பிரச்சினையை ஒடுக்குவதற்காக இராணுவத் தளபாடங்களை இறக்குமதி செய்தல்.

3). திட்டமிடப்படாத பொருளாதார "அபிவிருத்தி" திட்டங்கள்.

4). பலவீனமான பொருளாதாரக் கொள்கைகள்.

5). வெளிநாட்டு முதலீடுகள்.

சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி என்பன தமது பணம் பரீட்சார்த்த முதலீடுகளுக்கு உட்படுவதை விரும்புவதில்லை. உதாரணமாக 1970இல் உலகில் பொருளாதார வீக்கம் இருந்தபொழுது பிறேஸில் விமான உற்பத்தியை ஆரம்பித்ததை சர்வதேச நாணய நிதியம் கண்டித்தது.

இன்று இந்த நிதியங்கள் இலங்கையின் அண்டைநாடான இந்தியாவுக்கும் தமது கைகளை விரித்துள்ளன. இவற்றின் வலையிலிருந்து விடுவித்துக்கொள்ளாதவரை மூன்றாம் உலகநாடுகள் விடுதலை பெறுவதென்பது எப்படி?

* ரதன் *

---

# 1 இலட்சத்து 70 ஆயிரம் சாவுகள் !

இந்த வருட முடிவில் ஈராக்கில் இறந்த குழந்தைகளின் தொகை 1 இலட்சத்து 70 ஆயிரமாக இருக்கும் என சிறுவர்களின் நலன் காக்கும் சர்வதேச நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த மண்ணில் பிறந்த ஒரு சில வருடங்களில் தங்கள் வாழ்வை முடித்துக்கொள்ளும்படிக்கு இந்தக் குழந்தைகள் செய்த குற்றம்தான் என்ன? ஈராக்கில் பிறந்ததுதான்!. அதுவும் சாதாரண குடிமக்களுக்குப் பிள்ளைகளாகப் பிறந்ததுதான்!!.

குவைத்தை ஈராக் படைகள் ஆக்கிரமித்ததிலிருந்து ஈராக் மீது

www.tamilarangam.net

விதிக்கப்பட்ட பொருளாதார, மருத்துவ, உணவுத்தடைகள் குவைத்திலிருந்து ஈராக் படைகள் வாபஸான பின்னரும் நீக்கப்படவில்லை.

ஆக்கிரமிப்பு வெறியர்கள் பிடித்த சண்டையில் ஈராக்கிய மக்கள் பட்டினியால் கொல்லப்பட்டார்கள். குண்டுகளால் கொல்லப்பட்டார்கள். நவீன ஆயுதங்களால் கொல்லப்பட்டார்கள். மருந்தின்றி கொல்லப்பட்டார்கள். இதில் பெரும்பாலானவர்கள் பச்சைக் குழந்தைகளே.

கூட்டுச் சேர்ந்து ஈராக்கைத் தாக்கியழித்த உலக ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளும், இவற்றின் எடுபிடி அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையும் ஈராக்கில் இன்னும் எவ்வளவு ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பூதக் கண்ணாடி வைத்து மும்முரமாகத் தேடிக்கொண்டிருக்கின்றனவே தவிர கொல்லப்பட்டு மண்ணுக்குள் புதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று கிஞ்சித்தும் கவலைப்படவேயில்லை!. எப்படிக் கவலைப்படும்?. ஈவிரக்கமின்றிக் குழந்தைகளைக் கொல்லும் அரக்கக் கூட்டமே இவைதானே.

நாளைய சந்ததிகளை அழித்து விட்டால் தங்களைக் காப்பாற்றிக் கொண்டுவிடலாம் என்று வரலாற்றை அறியாத இந்த மூடர்கள் எண்ணிக்கொள்கிறார்களோ?!


# தூண்டில்

நவம்பர் 1991

இலம்: 47

ஆசிரியர் குழு: கடலோடிகள்

முகவரி: THOONDIL
Südasien Büro
Grosse Heimstr. 58
4600 Dortmund 1
F . R . G

தொலைபேசி: (0231)136633
(புதன் கிழமைகளில் 14-20மணி வரை)

சந்தா:

| | | | |
|---|---|---|---|
| ஜேர்மெனி | 6 மாதங்கள் | - | 20,-டி.எம் |
| | 1 வருடம் | - | 38,-டி.எம் |
| ஐரோப்பா | 6 மாதங்கள் | - | 25,-டி.எம் |
| | 1 வருடம் | - | 48,-டி.எம் |
| அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா | 1 வருடம் | - | 65,-டி.எம் |
| அவுஸ்ரேலியா | 1 வருடம் | - | 75,-டி.எம் |

தபாற்கணக்கு
இல: 30807468
Postscheckamt Dortmund
BLZ 44010046

சஞ்சிகை வளர்ச்சிக்கான உதவிகளில் ஒன்றாக உங்கள் சந்தா நிதியை அனுப்பி வைத்ததும் எமக்கு கடிதம் மூலம் அறிவிப்பதனால் சஞ்சிகையை அனுப்பி வைப்பதற்குரிய கால தாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

உங்கள் கருத்துகள், விமர்சனங்களுடன் எங்களுடையதும், உங்களுடையதுமான முயற்சிகளை பயனுள்ளதாக்குவோம்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறிவித்தல்

உண்மையில் தேவையானது ஒருமைப்பாடாகும். நாம் மக்களிடம் போய் "இதோ பார். நாங்கள் வந்துள்ளோம். எங்களை உங்கள் முன் நிறுத்தி உங்களுக்குத் தர்மம் செய்ய வந்துள்ளோம். உங்களுக்கு எங்கள் அறிவியலைக் கற்பிக்க வந்துள்ளோம். உங்கள் தவறுகளை, உங்கள் அறியாமையை உங்களுக்குச் சுட்டிக்காட்ட வந்துள்ளோம்" என்று பேசக் கூடாது. மாறாக நாம் திறந்த மனத்துடனும், எளிமையான அணுகுதலுடனும் அந்த மக்களிடம் இருக்கும் விசாலமான அறிவைக் கற்றுக் கொள்ள அங்கு போகவேண்டும்.